# 1


# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு

**இலங்கையின் பொருளாதாரம் 2010இல் வரவேற்கத்தக்க முறையில் 8.0 சத வீதத்தினால் வளர்ச்சியடைந்து, 2009இன் பின்னடைவிலிருந்தும் விரைவாக மீட்சியடைந்தமையினைப் பிரதிபலித்ததுடன் உயர்வானதும் வலுவானதுமான வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டுமிருக்கிறது.** சமாதானம் நிறைந்த சூழல், மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை, சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் வரலாற்றிலேயே ஆழம் நிறைந்த மந்த நிலைகளிலிருந்து உலகளாவிய பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்து வருகின்றமை என்பனவற்றின் பக்கபலத்துடன் 2010இல் பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளும் பாராட்டத்தக்க செயலாற்றத்தினை எடுத்துக்காட்டின. சாதகமான பணவீக்கமும் பணவீக்க தோற்றப்பாடுகளும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கின்ற அனைத்துச் சந்தைப் பிரிவுகளிலும் மிதமான வட்டி வீதங்களை பேணும் விதத்தில் மத்திய வங்கி அதன் வசதியான நாணயக் கொள்கை நிலை தொடர்வதனை இயலச் செய்தது. அரசிறைச் செயலாற்றத்தில் ஏற்பட்ட மேம்பாட்டினையும் அதேபோன்று மீண்டெழும் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டமையினையும் முக்கியமாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இறைச் சூழ்நிலை குறிப்பிடத்தக்களவிற்கு மேம்பட்டது. 2009ஆம் ஆண்டின் பின்னரைப் பகுதியிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு மாற்றமடைந்த வெளிநாட்டுத்துறை 2010இலும் தொடர்ந்து மேம்பட்டது. இறக்குமதி, ஏற்றுமதி இரண்டும் வலுவாக மீட்சியடைந்த வேளையில், சுற்றுலாக் கைத்தொழிலிலிருந்தான அதிகரித்த வருவாய்கள், உயர்ந்த உள்முகப் பணவனுப்பல்கள் என்பன விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறையினை பெருமளவிற்கு எதிரீடு செய்தமையின் மூலம் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறைவடைந்தது. அதிகரித்த மூலதன மற்றும் நிதியியல் பாய்ச்சல்கள் 2010இல் சென்மதி நிலுவையில் மிகையினைப் பதிவு செய்ய வழிவகுத்ததுடன், நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகளை மேலும் வலுப்படுத்தியது. சாதகமான பேரண்டப் பொருளாதாரச் சூழல், பக்கபலமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு என்பனவற்றின் உதவியுடன் நிதியியல்துறை மேம்பட்டதுடன் முறைமையின் உறுதிப்பாடும் வலுவடைந்தது.


**பணவீக்கம் தொடர்ந்தும் நடு ஒற்றை இலக்க மட்டத்தில் தாழ்வாகக் காணப்பட்டதுடன் பணவீக்கத்திற்கான சாதகமான தோற்றப்பாடு மத்திய வங்கி அதன் நாணய நிலையை 2010இல் மேலும் தளர்த்துவதனை இயலச் செய்தது.** குறிப்பிடத்தக்களவு கேள்வி அழுத்தங்கள் காணப்படாத நிலையில், மேம்பட்ட உள்நாட்டு வழங்கல் நிலைமைகள், குறிப்பிட்ட நிருவகிக்கப்பட்ட விலைகள் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டமை, அநேக நுகர்வுப்பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டமை என்பன விலைகளின் மீது சாதகமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. பொருளாதார நடவடிக்கைகளுக்கு மேலும் உதவும் பொருட்டு மத்திய வங்கி அதன் கொள்கை

வரைபடம் 1.1 காலாண்டு வளர்ச்சி மற்றும் தொழிலின்மை




வட்டி வீதங்களை குறைத்தது; 2010 யூலையில் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் ஒவ்வொன்றும் 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டதுடன் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஓகத்தில் மேலும் 50 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது. சந்தை வட்டி வீதங்கள் கொள்கை வீதக் குறைப்புக்களுடன் இணைந்து செல்லும் விதத்தில் தொடர்ந்தும் கீழ் நோக்கி சீராக்கப்பட்டதுடன் நாணயக் கூட்டுக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி எதிர்பார்க்கப்பட்ட பாதையில் தொடர்ந்தும் பயணித்தது. விரிந்த பணத்தின் ($M_{2b}$) வளர்ச்சி 2010 இறுதியளவில் 15.8 சதவீதத்திற்கு வேகமடைவதற்கு முன்னதாக 2010 செத்தெம்பரளவில் 13.6 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. இவ் வளர்ச்சியானது, 2009 இறுதியில் காணப்பட்ட 5.8 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியிலிருந்து படிப்படியாக உயர்வடைந்து 2010 இறுதியில் 25.1 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்த தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தூண்டப்பட்டு, உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையில் ஏற்பட்ட மீட்சி, அதேபோன்று அதிகரித்த மோதலுக்குப் பின்னைய இயலளவு விரிவாக்கம் என்பனவற்றின் காரணமாக, கொடுகடனுக்கு பரந்த தளத்தினைக் கொண்ட கேள்வி காணப்பட்டமையினைப் பிரதிபலித்தது. எனினும், உள்நாட்டுக் கொடுகடனில் தொடர்ந்தும்

வரைபடம் 1.2 பணவீக்கம்




ஏற்படக்கூடிய உயர்ந்த வளர்ச்சிக்கான சாத்தியம், அதேபோன்று மூலதன உட்பாய்ச்சலில் ஏற்படக்கூடிய சாத்தியமான அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக நாணய முகாமைத்துவம் எதிர்காலத்தில் சவாலுக்குட்படக் கூடுமாகையால் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளை நெருக்கமாகக் கண்காணிப்பதும் மிகையான கேள்வி அழுத்தங்கள் அதிகரிப்பதனைத் தடுப்பதற்குப் பொருத்தமான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளை வடிவமைப்பதும் தேவையாகவுள்ளது.

**பொருளாதார நடவடிக்கைகளிலேற்பட்ட விரிவாக்கம், வரி முறைமையில் விடாப்பிடியாகக் காணப்பட்ட சில குறிப்பிட்ட அமைப்பியல் பிரச்சனைகள் கட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் மீண்டெழும் செலவினம் கட்டுப்படுத்தப்பட்டமை என்பனவற்றின் உதவியுடன் அரசின் அரசிறை மீட்சியடைந்தமையின் காரணமாக 2010இல் ஒட்டுமொத்த இறைச் சூழ்நிலை ஊக்கமளிக்கும் முன்னேற்றத்தினைக் காட்டியது.** வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2009இல் மொ.உ.உற்பத்தியின் 9.9 சதவீதத்திலிருந்து 2010இல் இலக்கிடப்பட்ட மட்டமான மொ.உ.உற்பத்தியின் 7.9 சவீதத்திற்கு கட்டுப்படுத்தப்பட்டது. 2011இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 6.8 சதவீதத்திலும் நடுத்தர காலத்தில் 5 சதவீதத்திற்கும் கீழாகக் குறைக்கின்ற இறைத் திரட்சிக்கான அதன் கடப்பாட்டினை மீண்டும் உறுதிப்படுத்தியது. சனாதிபதி வரி ஆணைக்குழுவின் விதந்துரைப்புக்களுடன் இசைந்து செல்லும் விதத்தில், வரி முறைமைகளை இலகுபடுத்தல், விலக்கல்களை ஒழுங்குமுறைப்படுத்தல், வரி இணங்குவிப்புக்களை மேம்படுத்துதல் மற்றும் வரி நிருவாகத்தினை வலுப்படுத்துதல் என்பனவற்றினைக் கவனத்தில் கொண்டு வரி அமைப்பிற்கு பல்வேறு முக்கிய திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், பாரிய மற்றும் உபாய முதலீடுகளைக் கவனத்திற் கொண்டு முதலீட்டுச் சபைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளை ஒழுங்குமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இறைத்திரட்சி முயற்சிகள் பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினை எய்தும் நாணயக் கொள்கை நடத்தைக்கு வலுவூட்டுவதாக அமையும்.

**சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மீட்சி என்பனவற்றின் காரணமாக நிதியியல் துறையின் செயலாற்றமும் உறுதிப்பாடும் 2010இல் உறுதியடைந்தன. இம் மேம்பட்ட செயலாற்றம் அனைத்து முன்மதியுடைய குறிகாட்டிகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. வங்கியின் கொடுகடன் பாய்ச்சல் குறிப்பிடத்தக்களவிற்கு மீட்சியடைந்து, இலாபத்தன்மை மேம்பட்டது.** மூலதனப் போதுமை விகிதம் தேவையான கீழ் மட்டத்திற்கும் மேலே அதிகரித்ததுடன் செயற்படாக் கடன்களின் விகிதமும் வீழ்ச்சியடைந்த வேளையில் கடன் இழப்புக்களுக்கான ஒதுக்கங்களும் அதிகரித்தன. இடர்ப்பாட்டிலிருந்து நிதிக் கம்பனிகளின் செயலாற்றம் விரைவாக மேம்பட்ட வேளையில்

## சிறப்புக்குறிப்பு 1 நடுத்தர வருமானமுள்ள தோற்றம் பெற்றுவரும் சந்தை அந்தஸ்துக்குஇலங்கை தகைமை பெற்றமை

இலங்கை வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி நம்பிக்கை தகைமை பெறும் நாடுகளின் பட்டியலிலிருந்து 'நடுத்தர வருமானமுள்ள தோற்றம் பெற்றுவரும் சந்தை நாடு' என்ற அந்தஸ்துக்கு 2010 சனவரியில் முன்னேற்றமடைந்தது. நடுத்தர வருமானமுள்ள தோற்றம் பெற்றுவரும் சந்தை நாடு என்ற அந்தஸ்துக்கு இலங்கையைத் தகைமை பெறச் செய்வதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி நம்பிக்கையின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்தின் சலுகை ரீதியிலான நிதியியல் வளங்களைப் பயன்படுத்தும் நாடுகளுக்கான தகைமை பெறும் புதிய கட்டமைப்புக்கு அதன் நிறைவேற்றுச் சபை ஒப்புதலளித்த பின்பு மேற்கொள்ளப்பட்டது[1]. (அ) நீடித்த காலப்பகுதிக்கு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் கீழ்மட்ட வருமானத்திற்கும் கூடுதலான தலைக்குரிய வருமானத்தை அனுபவித்திருந்தால்; (ஆ) பன்னாட்டு நிதியியல் சந்தைகளுக்கு நீடித்து நிலைத்திருக்கக் கூடிய மற்றும் கணிசமான நுழைவுக்கான இயலளவைக் கொண்டிருந்தால்; (இ) தலைக்குரிய வருமானம், சந்தை நுழைவை இழந்தமை போன்ற கடுமையான குறுகிய காலத்தில் பாதிப்புறும் தன்மைகளைக் கொண்டிருக்காவிடில் நாடொன்று வறுமை ஒழிப்பு மற்றும் வளர்ச்சி நம்பிக்கை வகை அந்தஸ்திலிருந்து தகைமை பெறும்[2].

இலங்கை தகைமை பெறுவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தால் பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட சிறப்புக் காரணிகள் முக்கியமாக பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

(அ) இலங்கையின் தலைக்குரிய வருமானத்தை தற்போதைய பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பின் மட்டத்துக்கும் மேலாக கணிசமானளவில் உயர்த்தி 2008[3] அளவில் ஐ.அ.டொலர் 2,014 ஐ அடையச் செய்த அண்மைய ஆண்டுகளிலான பலமான பொருளாதாரச் செயலாற்றம் மற்றும் ஆகக் குறைந்தது கடந்த 5 ஆண்டுகளில் உறுதியான மேல் நோக்கிய போக்கைக் கொண்டிருத்தல்;

(ஆ) நடுத்தர காலத்தில் எறிவு செய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடனின் படிப்படியான வீழ்ச்சி துணைநில் ஒழுங்குமுறை நிகழ்ச்சித்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு இறைத் திரட்சியின் நேரம் பிந்தாத அமுலாக்கத்துடன் பொதுப்படுகடனின் நீடித்து நிலைத்திருக்கும் மட்டத்தை உறுதிப்படுத்தல்;

(இ) அண்மைய ஆண்டுகளில் மூலதனச் சந்தைகளுக்கு அதிகரித்த நுழைவிலிருந்து வரவேண்டிய நன்மைகள் மூலம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சந்தை நுழைவுப் பிரமாணத்தைப் பூர்த்தி செய்தமை, எடுத்துக்காட்டாக, 2009இல் வழங்கப்பட்ட ஐந்து ஆண்டு கொண்ட நாட்டிற்குரிய பன்னாட்டு முறிக்கு பெருமளவில் உதவுதொகை அளிக்கப்பட்டமையைப் பிரதிபலிக்கிறது[4].

தகைமை பெற்றதைத் தொடர்ந்து இலங்கை பன்னாட்டு நிதியியற் சந்தைகளில் பலமாக எறிவு செய்யப்பட்டதுடன் குறிப்பாக, தோற்றம் பெற்று வரும் சந்தைகளை இலக்கிடும் முதலீட்டாளர்களை கவர்வதன் மூலம் பன்னாட்டு மூலதனச் சந்தைகளுக்காக மேலும் திறந்துவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, அனைத்து முக்கிய பன்னாட்டுத் தரமிடல் முகவர்களும் 2010இல் அவர்களின் தரமிடல்களை உயர்த்தினர். இதன்படி, சாதகமான பேரண்டத் தோற்றப்பாட்டுடன் இணைந்து புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கை எதிர்வரும் ஆண்டுகளில் நாட்டுக்கு உயர் வெளிநாட்டு உட்பாய்ச்சல்களைக் கவர்வதற்கு உதவும்.

[1] எனினும், வருமானத் தொகுதிகளின் உலக வங்கியின் வகைப்படுத்தல் பின்வருமாறு: குறைந்த வருமானம் (ஐ.அ.டொலர் 995 இற்கும் குறைவானது); குறைந்த நடுத்தர வருமானம் (ஐ.அ.டொலர் 996 - ஐ.அ.டொலர் 3,945); கூடிய நடுத்தர வருமானம் ஐ.அ.டொலர் 3,946 - ஐ.அ.டொலர் 12,195) மற்றும் உயர் வருமானம் (ஐ.அ.டொலர் 12,196 அல்லது இதற்குக் கூடுதலானது).

[2] ப.நா.நிதியத்தின் *பொதுமக்களுக்கான தகவல் அறிவித்தலைப்* பார்க்கவும். இல.10/16 (பெப்புருவரி 2010), http:www.imf.org/external/np/sec/pn/2010/pn1016.htm

[3] 2009இல் இலங்கையின் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி ஐ.அ.டொலர் 2,057 ஆக விளங்குகையில் இது 2010இல் ஐ.அ.டொலர் 2,399 இற்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

[4] இலங்கை 2010இல் பத்து ஆண்டு கொண்ட போட்டி வீதத்தில் நாட்டுக்கான பன்னாட்டு முறி மூலம் ஐ.அ.டொலர் 1 பில்லியனைத் திரட்டியது.

நிதியியல் சந்தை தொடர்ந்தும் திரவத்தன்மையுடன் காணப்பட்டது. வங்கிகளினதும் ஏனைய நிதிக் கம்பனிகளினதும் கிளை வலையமைப்பு, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிதியியல் பணி வழங்கலை மேம்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளுடன் விரிவடைந்தன. கொடுப்பனவு முறைமைகளுக்கும் முறைமை அபிவிருத்திக்குமான மேம்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன. சிறிய வைப்பாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு உரிமம் பெற்ற வங்கிகளுக்கும் நிதிக் கம்பனிகளுக்குமாக 2010இல் கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், உயர் வட்டி வீத அளவுகளினால் பிரதிபலிக்கப்பட்டவாறு இடையீட்டுச் செலவுகள் இன்னமும் உயர்வாகவே இருந்ததுடன் கம்பனி படுகடன் பிணையங்கள் சந்தையில் காணப்பட்ட மந்தமான அபிவிருத்தி தொடர்ந்தும் காணப்படுவது முக்கிய கரிசனைக்குரிய விடயமாக விளங்குகின்றது.

**மக்களின் சமூக நலன்புரிகள் அதிகரித்து வருகின்ற நியதிகளில், பேரண்டப் பொருளாதாரக் கொள்கையின் இறுதி இலக்கான வறுமையின் வீழ்ச்சி புத்தாயிரமாம் அபிவிருத்தி இலக்கின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விஞ்சிக் காணப்பட்டமையும் தொழிலின்மையில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியும் வரவேற்கத்தக்க சாதனைகளாகும்.** வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ளவர்களின் சுட்டெண் 2006/ 2007இல் காணப்பட்ட 15.2 சதவீதத்திலிருந்து தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட குடியிருப்பாளர் வருமானம் மற்றும் செலவின அளவீடு - 2009/10 இலிருந்து பெறப்பட்ட முதல் சுற்று தகவல்களின்படி 7.6 சதவீதத்திற்கு அரைவாசியாகக் குறைவடைந்த வேளையில், முன்னேற்றங்கள் கிராமங்களிலும் பெருந்தோட்டங்களிலும் முனைப்பாகக் காணப்பட்டன. 2010இல் தொழிலின்மை வீதம் (வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக) 2002இன் 8.8 சதவீதத்திலிருந்து 4.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களுக்கான தொழில் வாய்ப்புக்களை உயர்த்துவதற்கும் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் மேலும் செயற்பாடுகள் தேவைப்படுகின்றன.

**2010இல் அதாவது மூன்று தசாப்தங்களாக நீடித்த மோதல்கள் முடிவடைந்த பின்னரான முதலாவது முழு ஆண்டிலும் இலங்கையின் பொருளாதாரம் வரவேற்கத்தக்க பேரண்டப் பொருளாதார சாதனைகளுடன் உண்மையான உயர்ந்த வளத்தினை எடுத்துக்காட்டியிருக்கிறது.** கொள்கை வகுப்போருக்கு இன்றுள்ள சவால் யாதெனில் மிக அடிக்கடி ஏற்படும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளின் பின்னணியில் இச் சாதனைகளையும் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டையும் தாக்குப்பிடிக்கச் செய்வதேயாகும். தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்தினை பேணுவதற்குப் பொருத்தமான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் தேவைப்படுகின்ற வேளையில் வழங்கல்பக்கதுத் தடைகளை காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதும் அவசியமானதாகும். உற்பத்தியாக்கத்தில் தொடர்ந்து காணப்படும் முன்னேற்றம், புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றியமை மற்றும் மனித மூலதன அபிவிருத்தி என்பன தொழிற்சந்தை மீதான அழுத்தத்தினை குறைத்த வேளையில் எதிர்பார்க்கப்பட்ட உயர்ந்த வளர்ச்சியைப் பேணுவதற்கு பெருமளவு தொழிலாளர் நகர்விற்கும் அதேபோன்று பெருமளவு தொழிலாளர் கிடைப்பனவிற்கும் வசதிகளைத் தொடர்வதற்கு பௌதீக உட்கட்டமைப்பிற்கு முன்னேற்றங்களும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பிற்குப் பொருத்தமான மாற்றங்களும் அவசியமாகும். உற்பத்திகள் மற்றும் சந்தைப்படுத்தல் நியதிகளில் வெளிநாட்டுக் குழப்பங்களுக்குப் பொருளாதாரம் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினை அதிகரிப்பதற்கு ஏற்றுமதிகளை பன்முகப்படுத்துவது அவசியமாக இருப்பதுடன் இம்முன்னேற்றத்தினை அடைவதற்கு தற்போதுள்ள இருபுடை மற்றும் பல்புடை உடன்படிக்கைகளை காத்திரமான முறையில் பயன்படுத்திக் கொள்வதும் தோற்றம் பெற்று வருகின்ற பிராந்தியச் சந்தைகளுடன் வர்த்தக உறவுகளை மேலும் நிறுவுவதற்கு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அதேபோன்று தனியார்துறை முதலீடுகளை மேம்படுத்தல் மற்றும் "வியாபாரத்தினை மேற்கொள்ளுங்கள்" என்ற சூழலை வலுப்படுத்துவதும் அவசியமானவைகளாகும். மசகெண்ணெய் போன்ற பண்டங்களின் விலை அசைவுகள் உட்பட மோசமான வெளிநாட்டு அபிவிருத்திகளிலிருந்து தோன்றுகின்ற குழப்ப நிலைமைகளின் தாக்கத்தை முக்கியமான அரச தொழில் முயற்சிகளின் கட்டமைப்பினை, சந்தை நிலைமைகளை பிரதிபலிக்கின்ற முறையில் மிக வினைத்திறனுடனும் வர்த்தக ரீதியில் ஆற்றல் வாய்ந்ததாகவும் தொழிற்படுத்துவதற்கு அம்முயற்சிகளுக்குத் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதனூடாக குறைக்க முடியும். இம்மாற்றங்கள் தற்பொழுது இடம்பெற்று வரும் இறைத்திரட்சி திரட்டல் செய்முறைகளுக்கு உதவியளிக்கும். இதன் விளைவாக கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் உயர்வடையும்.

## 1.2 2010இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்

### உண்மைத்துறை அபிவிருத்திகள்

**2010இல் இலங்கையின் பொருளாதாரம் 8.0 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க வளர்ச்சி வீதத்தினைப் பதிவு செய்ததுடன் இது இதுவரை பதிவு செய்யப்பட்ட ஆண்டு வளர்ச்சி வீதத்தில் இரண்டாவது உயர்ந்த வளர்ச்சியாகக் காணப்பட்டது**[1]. இது 1977இல் பொருளாதாரம் தாராளமயப்படுத்தப்பட்டதன் பின்னர் பதிவு செய்யப்பட்ட 4.9 சதவீதம் கொண்ட ஆண்டுச் சராசரி வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்கதொன்றாகும். நிரந்தர சமாதானம் அடையப்பட்டதன் மூலம் உருவாக்கப்பட்ட தூண்டுதலளிக்கும் சூழல், வலுவான பேரண்டப் பொருளாதாரச் சூழல், அதிகரித்த உள்நாட்டுக் கேள்வி, உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, உலகளாவிய பொருளாதாரத்தில் காணப்பட்ட படிப்படியான மீட்சியுடன் மேம்பட்ட வெளிநாட்டுக் கேள்வி மற்றும் சாதகமான உள்நாட்டு வானிலை நிலைமைகள் என்பன இவ்வுயர் வளர்ச்சிக்குப் பங்களித்தன.

**பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளினதும் மேம்பட்ட செயலாற்றம் 2010இன் உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களித்தன.** 2010இன் மொ.உ.உற்பத்தியில் ஏறத்தாழ 11.9 சதவீதத்திற்குப் பங்களித்த வேளாண்மைத் துறை 2009இன் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 2010இன் உயர்ந்த வளர்ச்சி முக்கியமாக, மீன்பிடித் துறையின் வெளியீட்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் சேர்ந்து நெல், தேயிலை, இறப்பர் மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்களின் அதிகரித்த உற்பத்திகளின் மூலம் பெறப்பட்டதாகும். எனினும், தெங்கு உற்பத்தி 19 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து மோசமான வானிலை நிலைமைகளின் காலங் கடந்த தாக்கத்தினைப் பிரதிபலித்தது. கைத்தொழில்துறை, அதிகரித்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்வி மேம்பட்ட முதலீட்டாளர் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை என்பனவற்றின் உதவியுடன் 8.4 சதவீதத்தினால் ஆரோக்கியமான முறையில் வளர்ச்சியடைந்தது. உணவு மற்றும் குடிபானம், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், புடவை மற்றும் ஆடைகள், போன்ற கைத்தொழில்களின் மேம்பட்ட செயலாற்றமும் அதேபோன்று கட்டடவாக்கத்துறையின் அதிகரித்த செயலாற்றமும் அதிகரித்த நீர் மீன்வலு உருவாக்கமும் இவ்வளர்ச்சிக்குப் பங்களித்தன. மொ.உ.உற்பத்திக்கான கைத்தொழில் துறையின் பங்கு 2010இல் 28.7 சதவீதத்தினால் சிறிதளவு அதிகரித்தது. 2010இல் பணிகள்துறை 8.0 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பணிகள் துறைகளுக்கான பாரிய பங்களிப்பாளரான மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை துணைத்துறை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளில் காணப்பட்ட அதிகரித்த செயலாற்றத்தின் காரணமாக 7.5

[1]இதற்கு முன்னர் இலங்கை 1968 மற்றும் 1978இல் 8.2 சதவீதம் கொண்ட பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது.

**அட்டவணை 1.1 நிலையான விலைகளில் (2002) கைத்தொழில் மூலங்களின்படி மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறை | பெறுமதி (ரூ. மில்லியன்) | | மொ. உ.உ இன் பங்கின் % | | மாற்றத்தின் வீதம் % | | மாற்றத்திற்கான பங்களிப்பு % | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2009 (அ) | 2009 (ஆ) | 2009 (அ) | 2010 (ஆ) | 2009 (அ) | 2010 (ஆ) | 2009 (அ) | 2010 (ஆ) |
| **வேளாண்மை** | **295,097** | **315,644** | **12.0** | **11.9** | **3.2** | **7.0** | **11.0** | **10.5** |
| வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, காட்டுத்தொழில் | 266,208 | 283,236 | 10.9 | 10.7 | 2.8 | 6.4 | 8.8 | 8.7 |
| மீன்பிடித் தொழில் | 28,888 | 32,407 | 1.2 | 1.2 | 6.9 | 12.2 | 2.2 | 1.8 |
| **கைத்தொழில்** | **701,129** | **760,219** | **28.6** | **28.7** | **4.2** | **8.4** | **33.9** | **30.1** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 52,030 | 60,079 | 2.1 | 2.3 | 8.2 | 15.5 | 4.7 | 4.1 |
| தயாரிப்பு | 427,334 | 458,660 | 17.4 | 17.3 | 3.3 | 7.3 | 16.3 | 16.0 |
| மின்வலு, எரிவாயு மற்றும் நீர் | 58,974 | 63,567 | 2.4 | 2.4 | 3.7 | 7.8 | 2.5 | 2.3 |
| கட்டடவாக்கம் | 162,790 | 177,912 | 6.6 | 6.7 | 5.6 | 9.3 | 10.3 | 7.7 |
| **பணிகள்** | **1,452,988** | **1,569,569** | **59.3** | **59.3** | **3.3** | **8.0** | **55.2** | **59.4** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 570,698 | 613,320 | 23.3 | 23.2 | -0.2 | 7.5 | -1.4 | 21.7 |
| சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 9,901 | 13,845 | 0.4 | 0.5 | 13.3 | 39.8 | 1.4 | 2.0 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 329,578 | 368,653 | 13.5 | 13.9 | 6.3 | 11.9 | 23.4 | 19.9 |
| வங்கியியல், காப்புறுதி உண்மைச்சொத்து மற்றும் ஏனையவை | 217,819 | 234,255 | 8.9 | 8.9 | 5.7 | 7.5 | 14.1 | 8.4 |
| வதிவிட உரிமை | 74,051 | 74,692 | 3.0 | 2.8 | 1.3 | 0.9 | 1.1 | 0.3 |
| அரச பணிகள் | 191,778 | 202,187 | 7.8 | 7.6 | 5.9 | 5.4 | 12.8 | 5.3 |
| தனியார் பணிகள் | 59,164 | 62,617 | 2.4 | 2.4 | 5.8 | 5.8 | 3.9 | 1.8 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 2,449,214 | 2,645,432 | 100.0 | 100.0 | 3.5 | 8.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறியகாரணி வருமானம் | | -28,262 | -33,931 | | | 49.8 | -20.1 | |
| மொத்த தேசிய உற்பத்தி | 2,420,952 | 2,611,500 | | | 4.8 | 7.9 | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. சுற்றுலா விடுதி மற்றும் உணவகங்கள் துணைத்துறை ஏறத்தாழ 39.8 சதவீதத்தினால் மிகக் கூடியளவிற்கு வளர்ச்சி கண்டமைக்கு சுற்றுலாத் துறையின் வலுவான செயலாற்றம் பக்கபலமாக விளங்கியது. போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல், வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து போன்ற ஏனைய முக்கிய துணைத் துறைகளும் 2009 உடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன.

**உயர்வடைந்த பொருளாதார நடவடிக்கைகளுடன் சேர்ந்து தொழில் வாய்ப்புக்களின் அதிகரித்த கிடைப்பனவினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொழிலின்மை வீதம் 2009இன் 5.8 சதவீதத்திலிருந்து 2008இன் மட்டத்திற்குக் கீழாக 2010இல் 4.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** தொழிற்படை பங்கேற்பு வீதம் 2009இன் 48.7 சதவீதத்திலிருந்து 2010இல் 48.1 சதவீதத்திற்கு சிறிதளவாக வீழ்ச்சியடைந்திருக்கையில் தொழில்புரிவோரின் எண்ணிக்கை 2010இல் 7.71 மில்லியனுக்கு 1.4 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த தொழில்நிலையில் பணிகள் துறையின் பங்கு 2009இன் 42.3 சதவீதத்திலிருந்து 2010இல் 43.1 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் கைத்தொழில்துறை 25.1 சதவீதத்திலிருந்து 2010இல் 24.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. தொழில்நிலை தகுதி நியதிகளில் சொந்தமாகத் தொழில்புரிவோரின் பங்கு 2010இல் அதிகரித்தது. எனினும், குறிப்பாக படித்த இளைஞர்களிடையே சார்பு ரீதியில் உயர் தொழிலின்மை காணப்படுவது கரிசனைக்குரிய விடயமாகும்.

**வேளாண்மைத் துறையில் ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வேளாண்மைத்துறை இரண்டும் மேம்பட்ட செயலாற்றத்தினைப் பிரதிபலித்தன.** சாதகமான வானிலை நிலைமைகளின் பெறுபேறாக தேயிலைத் துணைத்துறை 2009இன் இடர்ப்பாடான வெளியீட்டுடன் ஒப்பிடுகையில் 329 மில்லியன் கிலோக்கிறாம் கொண்ட முன்னொருபோதுமில்லாத உயர்ந்த ஆண்டு உற்பத்தியைப் பதிவு செய்த வேளையில், இறப்பர் உற்பத்தியும் தொடர்ந்து அதிகரித்தது. கராம்பு, மிளகு மற்றும் கறுவா போன்ற ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களும் வேளாண்மைத் துறையின் மேம்பட்ட செயலாற்றத்திற்கு சாதகமான முறையில் பங்களித்தன. உள்நாட்டு வேளாண்மையில் 2010இல் நெல் உற்பத்தி வரவேற்கத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவு செய்தமைக்கு குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு அதிகரித்தமை, சாதகமான வானிலை நிலைமைகள் மற்றும் வேளாண்மை உதவித் திட்டங்கள் தொடர்ந்தமை என்பன காரணங்களாக அமைந்தன. தெங்கு உற்பத்தி 2010இல் 19 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்ததுடன் சீனி உற்பத்தியும் 2010இல் சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தமை 2010இல் மீன் உற்பத்தி 12 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு பெருமளவிற்கு பங்களித்த வேளையில் உள்நாட்டுப் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக எடுக்கப்பட்ட அர்ப்பணிப்பு மிக்க முயற்சிகளின் காரணமாக அது குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

**2010இல் முக்கிய வேளாண்மைப் பயிர்களின் விலைகள் உயர்வாகக் காணப்பட்டன.** கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலையின் விலைகள், இலங்கைத் தேயிலைக்கு ஏற்பட்ட அதிகரித்த கேள்வியுடன் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டத்தினைப் பதிவு செய்தன. அனைத்து வகை இறப்பரினதும் சராசரி விலைகள் அதிகரித்தமைக்கு பன்னாட்டுச் சந்தையில் இயற்கை இறப்பரின் கடுமையான வழங்கல் பற்றாக்குறையும்

உலகளாவிய பொருளாதார மீட்சியின் காரணமாக அதிகரித்த கேள்வியும் உயர்வடைந்த மசகெண்ணெய் விலைகளும் காரணங்களாக விளங்கின. தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் கைத்தொழில் பயன்பாட்டிற்காக எழுந்த அதிகரித்த கேள்வியும் தேங்காயின் விலை குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிக்க வழிவகுத்தது. இரண்டு பருவ காலத்திலும் நெல் உற்பத்தி அதிகரித்திருந்த போதும் அரசாங்கம் அதன் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக தலையிட்டதன் மூலம் விலை உறுதியடைவதற்கு உதவியது. திரவப் பாலிற்கான சராசரி உற்பத்தியாளர் விலை பாற்பண்ணை உற்பத்தியை ஊக்குவிக்கும் விதத்தில் அதிகரிக்கப்பட்டது.

**வேளாண்மையை ஊக்குவிப்பதற்காக 2010ஆம் ஆண்டுப் பகுதியில் அரசாங்கம் அநேக வழிமுறைகளை மேற்கொண்டது.** தேயிலை மீள் பயிரிடுகையையும் புதிய பயிரிடுகையையும் ஊக்குவிப்பதற்காக சிறு தேயிலை உடமையாளர்களுக்கான உதவுதொகை அதிகரிக்கப்பட்ட வேளையில் தெங்கு மீளப் பயிரிடலுக்கும் புதிய பயிரிடலுக்கும் உதவுதொகைத் திட்டம் விரிவாக்கப்பட்டது. உயர்ந்த இறைச் செலவு காணப்பட்ட போதும், வளமாக்கி உதவுதொகைத் திட்டம் தொடர்ந்ததுடன் 2011 இலிருந்து தெங்கு மற்றும் ஏனைய களப் பயிர்களை உள்ளடக்கும் விதத்தில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. உயர்தர விதை வழங்கலை ஊக்குவிக்கும் நோக்குடன், அரச தனியார் பங்குடமை அடிப்படையின் கீழ் மூன்றாண்டு விதைப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

**கைத்தொழிலின் வெளியீடு, முன்னைய ஆண்டின் 4.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 8.4 சதவீதம் கொண்ட பாராட்டத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது.** மொத்தக் கைத்தொழில் வெளியீட்டில் ஏறத்தாழ 54.6 சதவீதத்திற்குப் பங்களிக்கும் தொழிற்சாலைக் கைத்தொழில் 2010இல் 7.5 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகைகள் 2010 ஓகத்திலிருந்து முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை சலுகைகள் புறக்கீடு செய்யப்பட்ட போதும் ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் மீட்சியடைவதற்கான அறிகுறிகளைக் காட்டின. ஆடைக் கைத்தொழில் அதிகரித்த உற்பத்தியாக்கம், மேம்பட்ட தரம் பன்முகப்படுத்தப்பட்ட தகைமை மற்றும் வெளிநாட்டுக் கேள்வி படிப்படியாக மீட்சியைடந்தமை என்பனவற்றின் மூலமாக போட்டித்தன்மை கொண்டதாக விளங்கியது. மொத்த தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீட்டில் ஏறத்தாழ 48.0 சதவீதத்திற்கு வகைகூறும் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்தி வகை முக்கியமாக இவ்வாண்டுப் பகுதியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உள்நாட்டுக் கேள்வி விரிவடைந்தமை மற்றும் சுற்றுலாவுடன் தொடர்பான நடவடிக்கைகள் அதிகரித்தமை என்பனவற்றின் மூலம் தூண்டப்பட்டன. ஏற்றுமதிச் சந்தை சார்ந்த கைத்தொழில்களின் அதிகரித்த வெளியீட்டிற்கு பங்களித்த மற்றைய முக்கிய தொழில் துறைகளாக கப்பல் கட்டல், பழுது பார்த்தல், போக்குவரத்துக் கருவிகள் மற்றும் பொறிகள் என்பன விளங்கின. சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்களுக்கான உயர்ந்த கேள்வியுடன் 2010இல் உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் வகையும் சிறந்த முறையில் செயலாற்றியது. நீர் மின்வலு உருவாக்கத்தில் ஏற்பட்ட கணிசமான முன்னேற்றம் மின்வலுத் துறையிலிருந்து பெறுமதிகூட்டல்களை தோற்றுவித்த வேளையில் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டமை அதேபோன்று தனியார் துறையில் காணப்பட்ட அதிகரித்த கட்டுமான நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாக கட்டடவாக்கத்துறை 9.3 சதவீதத்தினால் விரிவடைந்தது.

**உள்நாட்டு, வெளிநாட்டுக் கேள்விகள் இரண்டும் மீட்சியடைந்தமை சாதகமான பேரண்டப் பொருளாதார சூழல் என்பன 2010இல் கைத்தொழில்துறை வளர்ச்சிடைய உதவியளித்தன.** வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்தான அதிகரித்த கேள்வியுடன் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியடைந்தமை, குறைந்த வட்டி வீதங்ள், தாழ்ந்த பணவீக்கம், அதிகரிக்கின்ற வியாபாரம் மற்றும் நுகர்வோர் நம்பிக்கை என்பன உள்நாட்டுச் சந்தை சார்ந்த கைத்தொழில்கள் வளர்ச்சியடைவதற்காக தூண்டுதலளிக்கும் பொருளாதார சூழ்நிலையினை தோற்றுவித்தன. ஏற்றுமதி சந்தைக் கைத்தொழில்கள் உலகளாவிய பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமையின் காரணமாக முக்கிய வர்த்தப் பங்காளர் நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வி, மேம்பட்ட உற்பத்தியாக்கம், வர்த்தக அடையாளமிடல் உபாயங்கள், சந்தையைப் பன்முகப்படுத்துவதில் கையாளப்பட்ட உபாயங்கள் மற்றும் உற்பத்திப்பட்டியலின் விரிவாக்கம் என்பனவற்றின் மூலமாக நன்மைகளைப் பெற்றுக் கொண்டன. கைத்தொழில் துறையினைப் பேணி வளர்ப்பதற்காகவும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கைத்தொழில் பேட்டைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் கைத்தொழில் தளத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காகவும் சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகள் துறையினை மேம்படுத்துவதற்காகவும் அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை எடுத்ததுடன் உள்நாட்டு பெறுமதிகூட்டப்பபட்ட கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கான இறை ஊக்குவிப்புக்களையும் வழங்கியது.

**மொ.உ.உற்பத்தியில் 59.3 சதவீதத்திற்குப் பங்களித்த பணிகள்துறை 2009இன் 3.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 8.0 சதவீதம் கொண்ட ஊக்கமளிக்கும் விதத்தில் வளர்ச்சியடைந்தது.** மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம் 2009இன் எதிர்மறையான வளர்ச்சியைத் தொடர்ந்து, வரவேற்கத்தக்க வளர்ச்சியைக் காட்டியமைக்கு பன்னாட்டுச் சந்தைகள் படிப்படியாக மீட்சியடைந்தமையுடன் வெளிநாட்டு வர்த்தகம் விரைவாக மீட்சியுற்றமை, சமாதானம் அடையப்பட்டமையுடன் உள்நாட்டு வர்த்தகம் விரிவடைந்தமை என்பன காரணங்களாக விளங்கின. சுற்றுலாப் பயணிகளின் வருகை மீண்டும்

**அட்டவணை 1.2** **கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும்**

| விடயம் | ரூ. பில்லியன் | | வளர்ச்சி % | | மொ.உ.உ.இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2009 (அ) | 2010 (ஆ) | 2009 (அ) | 2010 (ஆ) | 2009 (அ) | 2010 (ஆ) |
| **1. உள்நாட்டுக் கேள்வி** | **5,149.2** | **6,114.1** | **2.7** | **18.7** | **106.5** | **109.1** |
| 1.1. நுகர்வு | 3,967.8 | 4,557.3 | 4.4 | 14.9 | 82.1 | 81.3 |
| தனியார் | 3,116.2 | 3,684.7 | 1.0 | 18.2 | 64.4 | 65.8 |
| அரசு | 851.5 | 872.6 | 19.3 | 2.5 | 17.6 | 15.6 |
| **1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்)** | **1,181.4** | **1,556.8** | **-2.8** | **31.8** | **24.4** | **27.8** |
| தனியார் | 863.5 | 1,209.6 | -7.1 | 40.1 | 17.9 | 21.6 |
| அரசு | 318.0 | 347.2 | 11.1 | 9.2 | 6.6 | 6.2 |
| **2. தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-313.9** | **-511.8** | **48.0** | **-63.0** | **-6.5** | **-9.1** |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,031.3 | 1,215.0 | -5.9 | 17.8 | 21.3 | 21.7 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,345.2 | 1,726.8 | -20.8 | 28.4 | 27.8 | 30.8 |
| **3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ) (1)(2)** | **4,835.3** | **5,602.3** | **9.6** | **15.9** | **100.0** | **100.0** |
| **4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3) - (1.1)** | **867.5** | **1,045.0** | **41.8** | **20.5** | **17.9** | **18.7** |
| தனியார் | 1,047.5 | 1,163.8 | 49.6 | 11.1 | 21.7 | 20.7 |
| அரசு | -179.9 | -118.9 | -103.3 | 33.9 | -3.7 | -2.1 |
| **5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம்** | **-55.8** | **-71.9** | **46.9** | **-28.8** | **-1.2** | **-1.3** |
| **6. தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள்** | **336.6** | **408.0** | **21.2** | **21.2** | **7.0** | **7.3** |
| **7. தேசிய சேமிப்புக்கள் (4)(5)(6)** | **1,148.3** | **1,381.1** | **46.4** | **20.3** | **23.7** | **24.7** |
| 8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4) - (1.2) | -313.9 | -511.8 | | | -6.5 | -9.1 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7) - (1.2) | -33.1 | -175.7 | | | -0.7 | -3.1 |
| 9. அலுவல்சார் கொடைகளற்ற வெளிநாட்டு நடைமுறைக் **கணக்குப் பற்றாக்குறை (2)(5)(6)** | **-33.1** | **-175.7** | | | **-0.7** | **-3.1** |


(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானது
(இ) சென்மதி நிலுவை மதிப்பீடுகளில் காணப்படும் வேறுபாடுகள் கணிப்பீட்டின் கால இடைவெளியினால் ஏற்பட்டதாகும்

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வேகமடைந்தமை மற்றும் உள்நாட்டுப் பயணத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றுடன் சுற்றுலா விடுதி மற்றும் உணவகத் துணைத்துறை வரவேற்கத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. போக்குவரத்து, கப்பற் சரக்குக் கையாளல், வான் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துறைகளின் மேம்பட்ட செயலாற்றத்துடன் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்துறை வளர்ச்சி கண்டது. முதலீடு மற்றும் கடன் வழங்கல் நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த அதிகரித்த வருமானம், வெளிநாட்டுச் செலாவணி தொழிற்பாடுகள் மற்றும் கடன் வழங்கல் நடவடிக்கைகளிலிருந்து கிடைத்த அதிகரித்த வருமானம், வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள் மற்றும் வங்கிக் கிளைகள் மற்றும் ஏனைய பணி வழங்கல் நிலையங்களின் விரிவாக்கத்தினூடாக நிதியியல் பணிகள் விரிவடைந்தமை என்பனவற்றின் காரணமாக வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து துணைத்துறை விரிவடைந்தது.

**பொருளாதாரச் செயற்பாட்டிலான மீட்சியைப் பிரதிபலித்து நுகர்வுச் செலவினம் 2010இல் 14.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் நாட்டின் சேமிப்புக்களும் முதலீடுகளும் மீட்சியடைந்தன.** தனியார் முதலீடுகள் 2009இல் மொ.உ.உற்பத்தியின் 64.4 சதவீதத்திலிருந்து 2010இல் 65.8 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியின் 17.6 சதவீதத்திலிருந்து 15.6 சதவீதத்திற்கு சிறிளதவால் வீழச்சியடைந்தன. உள்நாட்டுச் சேமிப்புக்களும் தேசிய சேமிப்புக்களும் 2009இன் மொ.உ.உற்பத்தியின் முறையே 17.9 சதவீதத்திலிருந்தும் 23.7 சதவீதத்திலிருந்தும் முறையே 18.7 சதவீதத்திற்கும் 24.7 சதவீதத்திற்கும் அதிகரித்தன. தனியார் முதலீடு 2009இன் மொ.உ.உற்பத்தியின் 17.9 சதவீதத்திலிருந்து 2010இல் 21.6 சதவீதத்திற்கு மீட்சியடைந்திருக்கையில் அரச முதலீடு 2009இன் மொ.உ.உற்பத்தியின் 6.6 சதவீதத்திலிருந்து 2010இல் 6.2 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமையால் 2010இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு 27.8 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த முதலீடுகளின் மீட்சி தேசிய சேமிப்புக்கள் மற்றும் முதலீட்டிற்கிடையிலான இடைவெளியினை மொ.உ.உற்பத்தியில் 3.1 சதவீதத்திற்கு விரிவடையச் செய்தன.

**வரைபடம் 1.3** **சேமிப்பும் முதலீடும் (மொ.உ.உ.இன் சதவீதமாக)**




**2010 இறுதியளவில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரியும் (2002 = 100) ஆண்டிற்கு ஆண்டு மாற்றமும் முறையே 5.9 சதவீதத்தினையும் 6.9 சதவீதத்தினையும் பதிவு செய்ததுடன் நுகர்வோர் விலைப் பணவீக்கம் 2010இல் தொடர்ந்து நடு ஒற்றை இலக்க மட்டத்திலேயே காணப்பட்டது.** இவ்வாண்டில் காணப்பட்ட ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்ததும் உறுதியானதுமான பணவீக்கத்திற்கு மேம்பட்ட உள்நாட்டு வழங்கல் நிலைமைகள், இறக்குமதித் தீர்வைகள் சீராக்கப்பட்டமை மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகள் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமை அதேபோன்று முன்மதியுடைய நாணயக் கொள்கை நிலை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன.

## வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

**உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் துறைகள் இரண்டிலும் காணப்பட்ட சாதகமான அபிவிருத்திகளுடன் நாட்டின் வெளிநாட்டுத்துறை 2010இல் மேலும் மேம்பட்டது.** 2010 சனவரியில் பன்னாட்டு நாணய நிதியம் இலங்கையின் தரத்தினை "நடுத்தர வருமான உருவாக்க சந்தைப் பொருளாதாரம்" என்ற அந்தஸ்திற்கு உயர்த்தியமையானது நாடு பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் அதனை வலுவாக எறிவு செய்வதனை இயலச் செய்தது. பன்னாட்டுத் தரமிடல் முகவரமைப்புக்களினால் நாட்டிற்கான கொடுகடன் தரமிடல் உயர்த்தப்பட்டமை, ப.நா. நிதியத்துடனான துணைநில் ஒழுங்குகள் வெற்றிகரமாக தொடர்கின்றமை, 2010 ஒத்தோபரில் நாட்டிற்கான மூன்றாவது முறி வெற்றிகரமாக வழங்கப்பட்டமை உட்பட அரசாங்கத்திற்கான அதிகரித்த நீண்ட கால மூலதனப்பாய்ச்சல் மற்றும் தனியார் துறைக்கான அதிகரித்த உட்பாய்ச்சல் என்பன வெளிநாட்டுத் துறையின் வலுவான செயலாற்றத்திற்கு உதவின. வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல் மீதான கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டமையும் முதலீட்டின் நம்பிக்கை மேம்படவும் வெளிநாட்டுத்துறை அபிவிருத்தியடையவும் உதவின.

**வெளிநாட்டுத்துறை 2009இன் உலகளாவிய மந்த காலத்தின் போது அவதானிக்கப்பட்ட கடுமையான சுருக்கத்திற்கு மாறாக 2010இல் வலுவாக மீண்டும் வேகமடைந்தது.** ஏற்றுமதி மீதான வருவாய்கள் 17.3 சதவீதத்தினால் அதிகரித்து கைத்தொழில் மற்றும் வேளாண்மைத் துறைகளிலிருந்தான உயர் வருவாய்களைப் பிரதிபலித்தது. இறக்குமதிகள் மீதான செலவினம் 32.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் வழிவகுத்தன. இதன் விளைவாக, வர்த்தகப் பற்றாக்குறை 2010இல் ஐ.அ.டொலர் 5,205 மில்லியனுக்கு விரிவடைந்தது. உலகளாவிய மீட்சி தொடர்பான நிச்சயமற்ற தன்மைகளுக்கிடையில் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்றுமதி வருவாய்கள் தளம்பலுற்ற போதிலும் அவை ஆண்டின் பிற்பகுதியில் மேம்பாடடைந்து ஜீஎஸ்பி+ சலுகைகள் மீளப் பெறப்பட்டதற்கு மத்தியிலும் புதிய வளர்ச்சிப் பாதையை எடுத்துக்காட்டின. இது சமாதானத்தால் ஏற்பட்ட நன்மைகளையும் உள்ளூர் ஏற்றுமதியாளர்களின் ஆற்றலையும் பிரதிபலித்தது. இதேவேளை, பன்னாட்டுப் பொருட்களின் விலைகள், உலகளாவிய பொருளாதார மீட்சி, தோற்றம் பெற்று வரும் சந்தைகளிலிருந்து பொருட்களுக்கான உயர் கேள்வி மற்றும் உலகளாவிய வழங்கல் தடைகள் காரணமாக அதிகரித்தன. இதனால், வேளாண்மை ஏற்றுமதிகள் பன்னாட்டுச் சந்தையில் உயர் விலைகளை அடைந்தன. குறிப்பாக, மசகெண்ணெய் விலைகள் உள்ளிட்ட பொருட்களின் உயர் விலைகள் இறக்குமதி மீதான செலவினத்தை 2010இல் அதிகரிக்கச் செய்தது. தனிப்பட்ட பாவனைக்கான உந்து ஊர்திகள் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் போன்ற நீண்டகால பாவனைப் பொருட்களின் இறக்குமதிகளும் தீர்வைக் குறைப்புக்கள் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டிலான அதிகரிப்பு காரணமாக அதிகரித்தன. இது போலவே, முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளும் பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி மீதான உயர் செலவினம் காரணமாக 2010இல் அதிகரித்தன.

வரைபடம் 1.4 பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதியும் மசகெண்ணெய் இறக்குமதிகளின் சராசரி விலையும்




**பணிகளிலான வெளிநாட்டு வர்த்தகம் குறிப்பிடத்தக்களவில் மேம்பாடடைந்து 2010இல் உயர் மிகையை உருவாக்குகையில் வருமானக் கணக்கு தொடர்ந்து பற்றாக்குறையைத் தொடர்ந்து பதிவு செய்தது.** முக்கியமாக போக்குவரத்து, பயணம், கணனி மற்றும் தகவல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகள் என்பவற்றை உள்ளடக்கிய பணிகளின் அனைத்துத் துணைத் துறைகளும் இவ்வாண்டில் சிறப்பாகச் செயலாற்றின. போக்குவரத்து மற்றும் பயணப் பணிகளிலிருந்தான தேறிய வருமானம், துறைமுகங்கள் மற்றும் வான் நிறுவன கைத்தொழில்களிலிருந்தான உயர் வருமானத்தாலும் சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட கூர்மையான அதிகரிப்பாலும் பெருமளவில் வளர்ச்சியடைந்தது. இதேவேளை வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2010இல் ஐ.அ.டொலர் 572 மில்லியனுக்கு அதிகரித்தது. இதற்கு தாய்நாட்டிற்கு அனுப்பிய இலாபங்களும் பங்கிலாபங்களும் முதலீடுகளிலிருந்து உழைத்த வட்டி மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் வெளிநாட்டுப் பிணையங்கள் மீதான வட்டி வருவாயினை விஞ்சிக் காணப்பட்டமையே காரணமாகும்.

**அட்டவணை 1.3 வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்**

| விடயம் | ஐ.அ.டொ மில்லியன் | | % மாற்றம் |
|---|---|---|---|
| | 2009(அ) | 2010 (ஆ) | |
| **ஏற்றுமதிகள்** | **7,085** | **8,307** | **17.3** |
| வேளாண்மை உற்பத்திகள் | 1,690 | 2,041 | 20.8 |
| கைத்தொழில் உற்பத்திகள | 5,305 | 6,173 | 16.4 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 89 | 93 | 4.4 |
| ஏனைய ஏற்றுமதிகள் | - | - | - |
| **இறக்குமதிகள்** | **10,207** | **13,512** | **32.4** |
| நுகர்வுப் பொருட்கள் | 1,972 | 2,870 | 45.6 |
| இடைநிலைப் பொருட்கள் | 5,669 | 7,496 | 32.2 |
| முதலீட்டு பொருட்கள் | 2,451 | 2,970 | 21.2 |
| ஏனையவை | 115 | 176 | 53.2 |
| ***வர்த்தக நிலுவை*** | **-3,122** | **-5,205** | **66.7** |
| **பணிகள், தேறிய** | **391** | **698** | **78.5** |
| பெறுகைகள் | 1,892 | 2,468 | 30.5 |
| கொடுப்பனவுகள் | 1,501 | 1,770 | 18.0 |
| **வருமானம், தேறிய** | **-488** | **-572** | **17.2** |
| பெறுகைகள் | 116 | 323 | 178.7 |
| கொடுப்பனவுகள் | 603 | 895 | 48.5 |
| **நடைமுறை மாற்றல்கள்,தேறிய** | **3,005** | **3,660** | **21.8** |
| தனியார் பணவனுப்பல், தேறிய | 2,927 | 3,608 | 23.3 |
| பெறுகைகள் | 3,330 | 4,116 | 23.6 |
| கொடுப்பனவுகள் | 403 | 508 | 26.1 |
| உத்தியோகபூர்வ மாற்றல்கள், தேறிய | 77 | 52 | -31.9 |
| **நடைமுறைக் கணக்கு நிலுவை** | **-214** | **-1,418** | **562.8** |
| ***மூலதனக் கணக்கு*** | ***233*** | ***164*** | ***-29.7*** |
| **நிதியியல் கணக்கு** | **2,361** | **2,713** | **14.9** |
| நேரடி முதலீடு, தேறிய | 384 | 435 | 13.3 |
| உட்பாய்ச்சல்கள் | 404 | 478 | 18.2 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 20 | 43 | 112.5 |
| தனியார் நீண்டகாலம், தேறிய | 79 | 149 | 88.0 |
| உட்பாய்ச்சல்கள | 390 | 580 | 48.6 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 311 | 431 | 38.6 |
| அரசு, நீண்டகாலம், தேறிய | 840 | 1,796 | 113.8 |
| உட்பாய்ச்சல்கள் | 1,780 | 2,460 | 38.2 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 940 | 665 | -29.3 |
| தனியார் குறுங்காலம்: | -311 | -198 | -36.4 |
| இதில் பட்டியலிடப்பட்ட முதலீடு, தேறிய | -6 | -230 | 3728.9 |
| அரசு, குறுங்காலம், தேறிய | 1,369 | 531 | -61.2 |
| தவறுகளும் விடுபாடுகளும் | 346 | -537 | -61.2 |
| **மொத்த நிலுவை** | **2,725** | **921** | |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (இ) | 5,097 | 6,610 | |
| இறக்குமதி மாதங்கள் | 6.0 | 5.9 | |
| மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் (இ) | 6,770 | 8,035 | |
| இறக்குமதி மாதங்கள் | 8.0 | 7.1 | |
| ஏற்றுமதி விலைச் சுட்டெண் | 112.5 | 124.9 | |
| இறக்குமதி விலைச் சுட்டெண் | 109.1 | 127.9 | |
| வர்த்தகத்தின் போக்கு | 103.1 | 97.6 | |
| **செலாவணி வீதங்கள்(சராசரி)** | | | உயர்வு(+)/தேய்வு(-) |
| ரூ./ஐ.அ.டொ. | 114.94 | 113.06 | 1.7 |
| ரூ./யென் | 1.23 | 1.29 | -4.6 |
| ரூ./யூரோ | 160.21 | 150.10 | 6.7 |
| ரூ./ஸ்ரேலிங் பவுண் | 179.87 | 174.81 | 2.9 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ தற்காலிகமானவை
(இ) ஆ.தி.ஒ - ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்


மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2010இல் தொழிலாளர்களின் உள்முகப் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 4.1 பில்லியனுக்கு கணிசமாக அதிகரித்தமையானது வர்த்தகப் பற்றாக்குறையினை எதிரீடு செய்ய பெருமளவிற்கு உதவியது.** உயர்ந்த கூலிகள் மற்றும் சம்பளங்களுக்காக வெளிநாட்டு தொழில்தருநர்களுடன் கூட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டமை, வர்த்தக வங்கிகள் செலாவணி இல்லங்களின் வலையமைப்பினை விரிவுபடுத்தியமை, அதிகரித்த எண்ணிக்கையான ஆட்கள் வெளிநாடுகளில் அதிகளவு சம்பளம் தரும் வேலைகளைப் பெற்றமை, முறைசார்ந்த வழிப்படுத்தல்களினூடாக உள்முகப் பணவனுப்பல்களைப் பெறுவதற்கு அரசாங்கம் தற்பொழுது எடுத்துவரும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மற்றும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய கிளைகளை திறந்து வருவது என்பன உயர்ந்தமட்ட தொழிலாளர் பணவனுப்பல்களைக் கவர்வதற்கான கருவிகளாக விளங்கின.

**2010இல் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு ஐ.அ.டொலர் 1,498 மில்லியன் அல்லது மொ.உ.உற்பத்தியில் 2.9 சதவீதம் கொண்ட பற்றாக்குறையினை பதிவு செய்தது.** உள்நாட்டுக் கேள்வி மீட்சியடைந்தமையின் உதவியுடன் இறக்குமதிக்கான கேள்வி அதிகரித்தமை மற்றும் பொருளாதார நடவடிக்கை விரிவடைந்தமை என்பனவற்றின் விளைவாக வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்தமையின் காரணமாக நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை விரிவடைந்தது. எனினும், இது உலகளாவிய மந்த நிலைமைகளின் பின்னணியில் நலிவடைந்த வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் கேள்விகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் மொ.உ.உற்பத்தியின் 0.5 சதவீதமான பற்றாக்குறையினைப் பதிவு செய்த 2009ஆம் ஆண்டு நீங்கலாக, முன்னைய ஒரு சில ஆண்டுகளின் சராசரி பற்றாக்குறைகளுக்கும் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

**மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறையினை விஞ்சிக் காணப்பட்டன.** அரசாங்கத்திற்கான நடுத்தர மற்றும் நீண்டகாலக் கடன்களின் உட்பாய்ச்சல் 2009 உடன் ஒப்பிடுகையில் 2010இல் அதிகரித்தமைக்கு பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்கு வெளிநாட்டுக் கடன்கள் விரைவாக பகிர்ந்தளிக்கப்பட்டமையே முக்கிய காரணமாகும்.10 ஆண்டு காலத்தைக் கொண்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட மூன்றாவது பன்னாட்டு நாட்டிற்கான முறி 2010 ஒக்தோபரில் வெற்றிகரமாக வழங்கப்பட்டது. எனினும், முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகளுக்கான கடன்கள் உட்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2010இல் ஐ.அ.டொலர் 516 மில்லியனுக்கு மேலும் வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல் மீது உலகளாவிய நிதியியல் நெருக்கடிகள் கொண்டிருந்த தாக்கமே முக்கிய காரணமாகும். வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட அரச பிணையங்களின் வெளிநின்ற பெறுமதி, அரச பிணையங்களின் மொத்தப் பெறுமதியின் உயர்ந்தபட்ச மட்டமான 10 சதவீதத்தினை அடைந்துவிட்டமையால் அரசாங்க ரூபாப் பிணையங்கள் சந்தைக்கான தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2010இல் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, 2010இல் தனியார் துறைக்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் அதிகரித்தவிடத்து குறுங்கால தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் குறைவடைந்தமைக்கு செளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக இருந்ததுடன் 2010இல் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால்

வரைபடம் 1.5 சென்மதி நிலுவை




உயர்ந்த எண்ணெய் இறக்குமதிச் செலவுகள் தொடர்பாக கணிசமானளவிற்கு மீள்கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் 2010இல் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன.

**2009இல் காணப்பட்ட ஐ.அ.டொலர் 2,725 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்களவிற்கு உயர்ந்த மிகையினைத் தொடர்ந்து 2010இல் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 921 மில்லியன் கொண்ட மிகையினைப் பிரதிபலித்தது.** நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை விஞ்சிய மூலதன மற்றும் நிதியியல் கணக்குகளுக்கான உயர்ந்த உட்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவையின் திரண்ட பற்றாக்குறையில் மிகையினை உருவாக்கியது. நீண்டகால முதலீடுகளுக்கான அரசாங்கத்திற்கும் அதேபோன்று தனியார் துறைக்குமான நிதியியல் உட்பாய்ச்சல்கள் சென்மதி நிலுவையின் மிகைக்குப் பங்களித்தன.

**நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் மேலும் மேம்பட்டு 2010இல் அதன் மிக உயர்ந்த மட்டத்தினைப் பதிவு செய்தது.** 2010 இறுதியில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (ஆசியத் தீர்ப்பனவு பெறுகைகள் நீங்கலாக) 2009 இறுதியின் ஐ.அ.டொலர் 5,097 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 6,610 மில்லியன் கொண்ட (5.9 மாத இறக்குமதிகளுக்குச் சமமானது) மிக உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்தது. செயற்றிட்ட நிதியிடலின் உயர்ந்த பகிர்ந்தளிப்பு, தொடர்ச்சியாகக் கிடைத்த ப.நா.நிதிய - துணைநில் ஒழுங்கு வசதிகள், நாட்டிற்கான மூன்றாவது பன்னாட்டு முறிகளின் வழங்கலின் மூலம் கிடைத்த பெறுகைகள் உள்நாட்டின் வெளிநாட்டு நாணயச் சந்தைகளிலிருந்து ஈர்க்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி என்பன ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்குப் பங்களித்தன. அதேவேளை, மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் (ஆ.தீர்ப்பனவு ஒன்றியப் பெறுகைகள் நீங்கலாக) 2009இன் ஐ.அ.டொலர் 6,770 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 இறுதியில் ஐ.அ.டொலர் 8,035 மில்லியனுக்கு (7.1 மாத இறக்குமதிகளுக்குச் சமனானது) 19 சதவீதத்தினால் அதிகரித்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2010இல் நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 43.3 சதவீதத்திற்கு மிதமடைந்தது.** உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கு நிதியிடுவதற்காக வழங்கப்பட்ட நாட்டிற்கான முறிகளிலிருந்தான பெறுகைகள் உட்பட அரசாங்கத்திற்கான உயர்ந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் மற்றும் மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படுகின்ற ப.நா.நிதியம் - துணைநில் ஒழுங்கு வசதிகளின் கீழான பகிர்ந்தளிப்பு என்பன வெளிநின்ற வெளிநாட்டு படுகடன் இருப்பின் அதிகரிப்பிற்கு பங்களித்த முக்கிய காரணிகளாக விளங்கின. நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலப் பகுதி வரையான படுகடனில் அரசாங்கப் படுகடன் 85.9 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் எஞ்சியவை தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகளையும் ப.நா. நிதியத்திற்கான படுகடன் கடப்பாடுகளையும் பிரசன்னப்படுத்தின. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளினது சதவீதமாக கடன் தீர்ப்பனவினையும் வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2009இல் 19.0 சதவீதத்திலிருந்து 2010இல் 15.2 சதவீதத்திற்கு குறைவடைந்தது.

**2010இல் செலாவணி வீதக் கொள்கையானது உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டைப் பேணுவதில் முக்கிய கவனத்தினைச் செலுத்தியது.** உள்நாட்டுச் சந்தைக்குள் வெளிநாட்டுச் செலாவணி தொடர்ச்சியாக உட்பாய்கின்றதொரு பின்னணியில், செலாவணிச் சந்தையில் செலாவணி வீதங்களின் மிகையான தளம்பல்களை தணிப்பதற்காக மத்திய வங்கி கிரமமான முறையில் வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக் கொண்டதன் மூலம் ஒதுக்கு நிலைமை மேலும் வலுவடைந்தது. எனினும், 2010இன் இறுதிக் காலாண்டில, பெற்றோலியச் செலவினை தீர்ப்பனவு செய்தமையின் காரணமாக எழுந்த கணிசமான வெளிப்பாய்ச்சலின் பின்னணியில் போதுமான வெளிநாட்டுச் செலாவணித் திரவத்தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியினை நிரம்பல் செய்ய வேண்டியிருந்தது.


## இறைத்துறை அபிவிருத்திகள்

**2010இல் இறைத் தொழிற்பாடுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் திரண்ட இறைப் பற்றாக்குறையினை முன்னைய ஆண்டின் 9.9 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 7.9 சதவீதத்தில் கட்டுப்படுத்துவதற்கு உதவின.** ஆண்டின் முதல் ஏழு மாதங்களுக்கான இறைத் தொழிற்பாடுகள் கணக்கு வாக்கெடுப்புக் கட்டமைப்பின் கீழும் அதன் பின்னர் சனாதிபதியின் தீர்மானத்தின் மூலம் அரசியல் யாப்பின் உறுப்புரை 150இன் 3ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் கீழும் மேற்கொள்ளப்பட்டன. 2010ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டம் 2010 யூலையில் நாடாளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டது. 2010இற்கான வரவு செலவுத்திட்டத்தினை சமர்ப்பிப்பதில் தாமதமும் புதிய அரசிறை மற்றும் செலவு வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்களுமே இருந்த போதும் திரண்ட இறைப் பற்றாக்குறை ஆரம்ப இலக்கான 8 சதவீதத்திற்குள் பேணப்பட்டது.


**வேகமடையத் தொடங்கிய உள்நாட்டு பொருளாதார நடவடிக்கையும் இறக்குமதிகளில் காணப்பட்ட வலுவான மீட்சியும் 2010இற்கான வரவு செலவுத்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆரம்ப இலக்கிற்கும் மேலாக அரசின் அரசிறையை அதிகரித்தன.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசிறை முன்னைய ஆண்டின் 14.5 சதவீதத்திலிருந்து 2010இல் 14.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. தீர்வை அமைப்பு நான்கு பிரிவுகளுக்கு ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமை, இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் அகற்றப்பட்டமை, அதேபோன்று உந்து ஊர்திகள் உட்பட பல்வேறு முக்கிய இறக்குமதிகள் மீதான பயனுறு வரிகள் குறைக்கப்பட்டமை என்பன இறக்குமதிக்கான கேள்வியில் உயர்வினை ஏற்படுத்தி இறக்குமதி தொடர்பான வரிகளிலிருந்து அரசிறைச் சேகரிப்புக்கள் அதிகரிப்பதற்கு வழிவகுத்தது. எனினும், உள்நாட்டுச் சந்தையில் பன்னாட்டுப் பண்டங்களின் விலைகள் உயர்வடைவதன் தாக்கத்தினை தணிப்பதற்காக பெற்றோல், டீசல் உட்பட பல முக்கிய பண்டங்கள் மீதான வரிகளை அரசாங்கம் திருத்தியது. மேலும், உலகளாவிய பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடிகளினால் பாதிக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு உதவுவதற்காகவும் அடையாளம் காணப்பட்ட குறிப்பிட்ட கைத்தொழில்களுக்கு ஆதரவளிப்பதற்காகவும் அரசாங்கம் பல்வேறு வரிச் சலுகைகளை வழங்கியது.

**மீண்டெழும் செலவினத்தை கடுமையாகக் கண்காணித்து வந்தமையின் மூலம் அரசாங்கத்தின் செலவினம் 2010ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தின் ஆரம்ப இலக்கிற்குள் பேணப்பட்ட வேளையில் மூலதனச் செலவினம் திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் விரைவுபடுத்தப்பட்ட நடைமுறைப்படுத்தலின் பொருட்டு பேணப்பட்டது.** மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2009இன் மொ.உ.உற்பத்தியின் 24.9 சதவீதத்திலிருந்து 2010இன் மொ.உ.உற்பத்தியின் 22.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்தச் செலவினத்திலும் தேறிய கடன் வழங்கலிலும் 1.2 சதவீதப் புள்ளியினால் ஏற்பட்ட குறைப்பு, மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட 1.5 சதவீதப்புள்ளிக்கான குறைப்பினதும் மூலதன மற்றும் தேறிய கடன் வழங்கல்கள் 0.5 சதவீதத்தினால் குறைவடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். மீண்டெழும் செலவினத்தினை சிக்கனப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட

வரைபடம் 1.6 அரசிறை, செலவினம் மற்றும் மொத்த இறைப் பற்றாக்குறை (மொ.உ.உ.இன் சதவீதமாக)




வரைபடம் 1.7 அரச படுகடன் (மொ.உ.உ.இன் சதவீதமாக)





ஒருங்கிணைந்த முயற்சிகள் அரச செலவினத்தின் ஆரம்ப வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளுக்குள் கட்டுப்படுத்துவதற்கு இயலச் செய்த வேளையில் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் பாரிய தடைகளெதுவுமின்றி மேற்கொள்ளப்பட்டன.

**செலவுப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு வெளிநாட்டு மூலங்களில் அரசாங்கம் தங்கியிருந்தமையின் மூலம் உள்நாட்டுச் சந்தை மற்றும் வட்டி வீதங்களின் மீதான அழுத்தம் குறைவடைந்தது.** மேம்பட்ட முதலீட்டாளர் நம்பிக்கையும் பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் நிலவிய சாதகமான கடன்பாட்டு நிலைமைகளும் 6.25 சதவீதம் கொண்ட குறைந்த வட்டி வீதத்தில் 10 ஆண்டு கால முதிர்ச்சியைக் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்குவதற்கும் முறியின் பெறுமதியிலும் பார்க்க ஆறு மடங்கு கூடுதலான பெறுமதியினை கட்டளை ஏட்டில் கவரும் விதத்தில் குறைந்த வட்டி வீதத்தில் நீடிக்கப்பட்ட காலப்பகுதியுடன் இலங்கை அபிவிருத்தி முறிகளை வழங்குவதனையும் அரசாங்கத்திற்கு இயலச் செய்தது. உள்நாட்டு மூலங்களூடாக பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு வங்கி நிதியிடலின் மீது தங்கியிருப்பதனை அரசாங்கம் குறைத்துக் கொண்டதன் காரணமாக தனியார் துறைக்கான மூலவளங்கள் விடுவிக்கப்பட்டதுடன் உள்நாட்டு வட்டி வீதங்கள் மீதான அழுத்தமும் இலகுபடுத்தப்பட்டது. 2010இல் மொத்தத் தேறிய உள்நாட்டு நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 3.6 சதவீதமாக விளங்கிய வேளையில் வெளிநாட்டுக் கடன்கள் (மொ.உ.உற்பத்தியின் 3.5 சதவீதம்) அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் (மொ.உ.உற்பத்தியின் 0.9 சதவீதம்) என்பனவற்றை உள்ளடக்கிய தேறிய வெளிநாட்டு நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 4.4 சதவீதமாக இருந்தது. அதேவேளை, மொ.உ.உற்பத்திக்கான வெளிநின்ற அரச படுகடன் விகிதம் 2009இன் 86.2 சதவீதத்திலிருந்து 2010இல் 81.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, குறைந்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையும் பெயரளவு மொ.உ.உற்பத்தியில் உயர்ந்த வளர்ச்சியும் முக்கிய காரணங்களாக விளங்கின.

## நாணயத்துறை அபிவிருத்திகள்

**பொருளாதார நடவடிக்கைகளுக்கு உதவும் விதத்தில் கொடுகடன் வளர்ச்சியைத் தூண்டும் நோக்குடன் 2010இன் பின்னரைப் பகுதியில் கொள்கை வட்டி வீதங்களைக்**

வரைபடம் 1.8 **மத்திய வங்கியின் கொள்கை வீதங்களும் தேர்ந்தெடுக்கப்பட் சந்தை வட்டி வீதங்கள்**




**குறைத்ததன் மூலம் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையினை 2010இல் மேலும் தளர்த்தியது.** 2010இன் முதற் காலாண்டுப் பகுதியில் பண நிரம்பல் வளர்ச்சியில் காணப்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி குறைவடைந்த கேள்வி அழுத்தங்களை எடுத்துக்காட்டிய வேளையில் உள்நாட்டு நுகர்வோர் விலைகளுக்கான மேம்பட்ட தோற்றப்பாடு மத்திய வங்கி அதன் வசதியான நாணயக் கொள்கை நிலையினை இவ்வாண்டும் தொடர்வதற்கு அதனைத் தூண்டியது. மீள்கொள்வனவு வீதம் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் ஆகிய இரண்டிலும் யூலையில் 25 அடிப்படைப் புள்ளிகளினாலும் பின்னர் ஒகத்தில் மேலும் 50 அடிப்படைப் புள்ளிகளினாலும் செய்யப்பட்ட குறைப்பின் காரணமாக கொள்கை வீத வீச்சு குறுக்கமடைந்ததுடன் 2010 இறுதியில் மீள்கொள்வனவு வீதம் 7.25 சதவீதமாக இருந்த வேளையில் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 9.00 சதவீதமாக இருந்தது. 2011 சனவரியில் கொள்கை வீதங்கள் மேலும் குறைக்கப்பட்டதுடன் வட்டி வீத வீச்சு மேலும் குறைக்கப்பட்டதன் காரணமாக மீள்கொள்வனவு வீதம் 7.00 சதவீதத்திலும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 8.50 சதவீதத்திலும் நிர்ணயிக்கப்பட்டன.

**2009இன் நடுப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையில் ரூபாத் திரவத்தன்மையில் ஏற்பட்ட நேர்மாற்றத்தினைத் தொடர்ந்து 2010இல் பணச் சந்தை தொடர்ந்தும் மிகையான நிலையில் காணப்பட்டது.** மிகையான திரவத்தன்மை கட்டியெழுப்பப்பட்டமைக்கு, ரூபாவின் நியாயமற்ற உயர்வினைத் தடுக்கும் நோக்குடன் நாட்டிற்குள் உட்பாய்ந்த வெளிநாட்டுச் செலாவணியினை மத்திய வங்கி ஈர்த்துக் கொண்டமையே பெருமளவிற்குக் காரணமாகும். ஒத்தோபரில் பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கு நாட்டிற்கான முறிகள் வழங்கப்பட்டமை, திறைசேரி உண்டியல்களிலும் முறிகளிலும் செய்யப்பட்ட தேறிய வெளிநாட்டு முதலீடுகள், அரசாங்கம் மற்றும் தனியார்துறை இரண்டிற்குமான வெளிநாட்டு நிதிகளின் உட்பாய்ச்சல்கள் என்பன உள்நாட்டின் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணியில் மிகையினை கட்டியெழுப்பின.


**மத்திய வங்கி, திரவத்தன்மையினை முகாமைப்படுத்துவதற்கும் அதன் மூலம் வட்டி வீதங்களை உறுதிப்படுத்தி, இலக்கிடப்பட்ட பாதையுடன் இணைந்து செல்லும் விதத்தில் ஒதுக்குப் பணத்திற்கு வழிகாட்டுவதிலும் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டது.** மத்திய வங்கி வசமிருந்த அரச பிணையங்களின் இருப்பு குறைவடைந்தமையினால் ஓரிரவு மற்றும் தவணை அடிப்படைகளில் திரவத்தன்மையினை ஈர்ப்பதற்கு மத்திய வங்கி அதன் சொந்தப் பிணையங்களை வெளியிட்டது. 2009இல் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கைகளும் மிகையான திரவத்தன்மையின் ஒரு பகுதியை ஈர்த்துக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்டன. 2010 ஒத்தோபரில், மத்திய வங்கி முறி - கடன்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்தியதுடன் அவ்வாறு கடன்பட்ட முறிகள், சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினை ஈர்ப்பதற்காக ஆண்டின் பிற்பகுதியிலிருந்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. அதேவேளை, மூன்று மாத திறைசேரி உண்டியல்களின் மீதான முதலாந்தரச் சந்தை விளைவு வீதங்கள் வங்கியின் மீள்கொள்வனவு வீதங்களுக்கும் கீழேயுள்ள மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தமையினால் 2010 ஒத்தோபர் 20ஆம் நாளிலிருந்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான ஓரிரவு மற்றும் தவணை ஏலங்கள் நிறுத்தப்பட்டமை காரணமாக ஏற்பட்ட மிகையான திரவத்தன்மையின் பாரிய அளவுகளை வங்கிகள் அவற்றின் சொத்துப்பட்டியலை முகாமைப்படுத்துவதற்கு குறுங்கால அரச பிணையங்களை கொள்வனவு செய்வதற்கு அவற்றிடையே தீவிரமான போட்டித்தன்மையொன்று ஏற்பட வழிவகுத்தது. இதன்படி சந்தைப் பங்கேற்பாளர்கள் துணைநில் வசதிகளினூடாக அவர்களது மிகையான திரவத்தன்மையினை தொடர்ந்தும் மத்திய வங்கியில் வைத்திருந்தனர். 2010 இறுதியளவில் பணச் சந்தையில் காணப்பட்ட திரண்ட மிகையான திரவத்தன்மை 2009 இறுதியின் ரூ.159.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.124.3 பில்லியனாகக் காணப்பட்டது.

**மத்திய வங்கியின் நாணயத் தொழிற்பாடுகள், எறிவு செய்யப்பட்ட முக்கிய பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளைக் கணக்கிலெடுத்து தயாரிக்கப்பட்ட அதன் நாணய நிகழ்ச்சித்திட்டத்தின் வழிகாட்டலின்படி நாணய இலக்கிடல் கட்டமைப்பிற்குள் தொடர்ந்தும் காணப்பட்டன.** இதன்படி, விரிந்த பணம் (ஆ2டி) நாணயக் கொள்கைக்கான இடையீட்டு இலக்காக தொடர்ந்தும் இருந்த வேளையில், பெருக்கியொன்றின் மூலமாக விரிந்த பணத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒதுக்குப் பணம் நாணயக் கொள்கைக்கான வங்கியின் தொழிற்பாட்டு இலக்காக விளங்கியது. ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட மத்திய வங்கியின் நாணய நிகழ்ச்சித்திட்டம் விரிந்த பணம் மற்றும் ஒதுக்குப் பணம் ஒவ்வொன்றினதும் ஆண்டுச் சராசரி வளர்ச்சிக்கான இலக்கினை 14.5 சதவீதத்தில் நிர்ணயித்தது. எனினும், அதன்

பின்னர் நடுவாண்டில் உள்நாட்டுப் பொருளாதாரம் ஆரம்பத்தில் எறிவு செய்யப்பட்டதிலும் பார்க்க உயர்ந்த வேகத்தில் விரிவடைந்தமையை தெளிவாகக் காண முடிந்தமையினால் வங்கி இவ்வாண்டிற்கான நாணய நிகழ்ச்சித்திட்டத்தினை திருத்தியமைத்ததுடன் 2010 யூலையில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 2010ஆம் ஆண்டிற்கான தேசிய வரவு செலவுத்திட்டத்திலிருந்த தகவல்களை உள்ளடக்குவதும் அவசியமாயிருந்தது. இதன்படி, 2010இல் விரிந்த பணத்தின் இலக்கிடப்பட்ட வளர்ச்சி 2010 யூலையில் 15 சதவீதத்திற்கு மேல் நோக்கி திருத்தப்பட்டது. அதேவேளை, குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொருளாதார நடவடிக்கை பழைய நிலைக்கு மீண்டதனைக் கருத்திற் கொண்டு பண நிரம்பலிலுள்ள "பொதுமக்களால் வைத்திருக்கப்படும் நாணயத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு வைப்பு வீதங்களுக்கான நாணயத்தில் அதிகரிப்பொன்று ஏற்பட வழிவகுத்ததுடன் அதன் பலனாக பணப் பெருக்கியில் வீழ்ச்சி ஏற்பட வழிவகுத்தது. இவ்வபிவிருத்திகளை கணக்கிலெடுக்கையில் ஒதுக்குப் பணத்தின் ஆண்டுச் சராசரியின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சிக்கான இலக்கு, விரிந்த பணத்தின் இலக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் 2010 யூலையில் 21.2 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

**2010இல் நாளாந்த சராசரி ஒதுக்குப் பணத்தின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி 2010ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட நாணய நிகழ்ச்சித்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கின் மட்டத்துடன் ஒத்துச் செல்வதாக இருந்தது.** மூலப்பக்கத்திலிருந்து நோக்குகையில், 2010ஆம் ஆண்டில் ஒதுக்குப் பணத்தில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முழுக் காரணமாகும். அரசாங்கம் பன்னாட்டுச் சந்தைகளில் நாட்டிற்கான முறிகளை வழங்கியதன் மூலம் அது திரட்டிய நிதியத்தின் ஒரு பகுதியை (ஐ.அ.டொலர் 492 மில்லியன்) வங்கி வசமிருந்த ரூ.55 பில்லியன் கொண்ட திறைசேரி உண்டியல்களை இளைப்பாறச் செய்வதற்கு பயன்படுத்தியமையினாலும் அவ்வாறு திரட்டப்பட்ட நிதியத்தில் மேலும் ஐ.அ.டொலர் 386 மில்லியனை மத்திய வங்கிக்கு விற்பனை செய்தமையினாலும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் விரிவடைந்தன. இது வர்த்தக வங்கிகளுக்கான அரசாங்கத்தின் பொறுப்புக்களை ஓரிரவு தீர்ப்பனவு செய்வதற்கு அதனை இயலச் செய்தது. அதேவேளை, மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல் தொகையில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியின் விளைவாக மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன.

வரைபடம் 1.9 பணம், கொடுகடன் மற்றும் வட்டி வீதங்கள்




**2010இல் விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டு சராசரி வளர்ச்சி 15.3 சதவீதமாக அமைந்து இலக்கிடப்பட்ட வளர்ச்சியான 15 சதவீதத்துடன் ஒத்துச் செல்வதாக விளங்கியது.** பயன்பாட்டுப் பக்கத்தில், விரிந்த பணத்தின் வளர்ச்சி பொதுமக்களினால் வைத்திருக்கப்பட்ட நாணயம், அதேபோன்று வைப்புக்களில் குறிப்பாக, கேள்வி வைப்புக்கள் ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களில் பிரதிபலித்தது. வட்டி உழைக்கும் வைப்புக்கள் அதாவது வர்த்தக வங்கிகளில் பொதுமக்களினால் வைத்திருக்கப்பட்ட சேமிப்பு மற்றும் தவணை வைப்புக்கள் (போலி நாணயம்) 2009இன் 18.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 14.6 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் அதிகரித்தன.

**இவ்வாண்டுப் பகுதியில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் சுருக்கமடைந்தமையினால், விரிந்த பணத்தின் விரிவாக்கம் வங்கித்தொழில் முறையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலமே பெறப்பட்டது.** தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் விரிவடைந்தமைக்கு 2009இன் 5.8 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 25.1 சதவீதம் கொண்ட ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்த 2010இல் வலுவாக மீட்சியடைந்த தனியார்துறை வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்ற கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பே பெருமளவிற்குக் காரணமாகும். மோதலுக்குப் பின்னைய பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்ட மேம்பட்ட தன்மை போன்ற காரணிகளுடன் வட்டி வீதங்களின் வீழ்ச்சி சேர்ந்து கொண்டமை, உயர்வடைந்த வியாபார நம்பிக்கை, உலகளாவிய பொருளாதாரத்தில் இடம்பெற்று வரும் மீட்சி என்பன தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சலைத் தூண்டின. அரச கூட்டுத்தாபனங்களுக்கு, குறிப்பாக, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட கொடுகடன் இவ்வாண்டுப் பகுதியில் அதிகரித்தமையின் மூலம் 2010இல் நாணய விரிவாக்கத்திற்கு பங்களித்தது. எனினும், அரசாங்கத்துக்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் இவ்வாண்டுப் பகுதியில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு, இவ்வாண்டுப் பகுதியில் இலங்கை அபிவிருத்தி முறிகளில் வர்த்தக வங்கிகளின் முதலீடுகள் அதிகரித்தமையுடன் சேர்ந்து அவை வெளிநாட்டில் வைத்திருந்த வைப்புக்கள் வீழ்ச்சியடைந்தமை மற்றும் எண்ணெய் செலவுகளை தீர்ப்பனவு செய்வதற்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கல் செய்யப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி என்பன காரணங்களாக அமைந்தன.

**மத்திய வங்கியின் கொள்கை வீதங்களில் செய்யப்பட்ட குறைப்பினைத் தொடர்ந்து 2010இல் சந்தை வட்டி வீதங்கள் மேலும் கீழ் நோக்கி திருத்தப்பட்டமை பொருளாதார நடவடிக்கைகளுக்கு மேலும் தூண்டுதலை வழங்கின.** இவ்வாண்டுப் பகுதியில், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்கள், கொள்கை வட்டி வீத வீச்சின் நடுப்பகுதியினைச் சுற்றி தொடர்ந்தும் காணப்பட்டதன் மூலம் நாணயக் கொள்கையின் காத்திரமான பரிமாற்றல் செயல்முறைக்கு பங்களித்தது. அத்துடன், இவ்வாண்டில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, கீழ் நோக்கிப் பெயர்ந்த, அரசாங்க பிணைங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவு வளையி 2010இல் நீண்ட முதிர்ச்சிகளுக்கு நீட்டமடைந்தது. வீத அமைப்பில் ஏற்பட்ட இக் கீழ் நோக்கிய பெயர்விற்கு பணச் சந்தையில் காணப்பட்ட தொடர்ச்சியான மிகையான திரவத்தன்மையும், அதேபோன்று அப்போது நிலவிய பணவீக்கத்திற்கான சாதகமான தோற்றப்பாடும் காரணங்களாக விளங்கின. மத்திய வங்கியினால் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைக்கு பதிலிறுத்தும் விதத்தில் 2010இல் வர்த்தக வங்கிகள் அவற்றின் வைப்பு வீதங்களையும் கடன் வழங்கல் வீதங்களையும் படிப்படியாக குறைத்தன. மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதங்களை 2011 சனவரியில் மேலும் குறைத்தமையின் காரணமாக வட்டி வீதங்களின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு 2011இலும் தொடரும்.

## நிதியியல் துறைச் செயலாற்றமும் முறைமை உறுதிப்பாடும்

**2010இல் நிதியியல் துறையின் ஒட்டுமொத்த செயலாற்றம் மேம்பட்டமையானது நாட்டின் நிதியியல்துறை உறுதிப்பாடு மேலும் வலுவடைய வழிவகுத்தது.** பரீட்சிப்புக்கள் மற்றும் பிரச்சனைக்கான தீர்வுகள் என்பனவற்றினூடான தொடர்ச்சியான மேற்பார்வை வழிமுறைகளுக்குப் புறம்பாக, நிதியியல் துறையின் உறுதிப்பாட்டினை மேலும் வலுப்படுத்துவதற்காக பல ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் பொதுமக்களின் நம்பகத்தன்மை அதிகரித்தது. நிதியியல் குறிப்பிட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகளின் காரணமாக 2008இலும் 2009இலும் தோற்றிய தீர்மானம் தொடர்பான கரிசனைகளும் பொதுமக்கள் மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கையிலும் வியாபாரத் தொழிற்பாடுகளிலும் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தய போதிலும் நிதியியல் நிறுவனங்கள் சந்தைகள், கொடுப்பனவு முறைமைகள் மற்றும் பாதுகாப்பு வலையமைப்பு போன்ற அனைத்து முன்னணிக் குறிகாட்டிகளினாலும் பிரதிபலிக்கப்பட்டவாறு, மேம்பட்ட செயலாற்றம் காணப்பட்டன.

**2010இல் வங்கித்தொழில் மற்றும் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இரண்டும் மேம்பட்ட செயலாற்றத்தினைக் காட்டி வளர்ச்சியடைந்து வருகின்ற பொருளாதாரத்திற்கு வசதியளிக்கின்ற விதத்தில் நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அதிகரித்தமையினைப் பிரதிபலித்தன.** நிதியியல் முறைமையில் மிக ஆதிக்கம் நிறைந்ததும் முறையியல் ரீதியில் முக்கியத்துவம் கொண்டதுமான வங்கித்தொழில்துறை, உயர்ந்த வீத வியாபார வளர்ச்சியைக் காட்டிய வேளையில், குறிப்பிடத்தக்களவு உயர்ந்த மட்ட இலாபத்தன்மையினையும் பேணியது. அவர்களது மூலதனப் போதுமை விகிதமும் திரவத்தன்மை விகிதமும் நியதிச்சட்ட வரையறைகளுக்கு மிக மேலேயே காணப்பட்டன. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களைப் பொறுத்தவரை 2009இல் காணப்பட்ட திரவத்தன்மைப் பிரச்சனைகளுக்குப் பின்னர் 2010இல் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் துறை படிப்படியாக மீட்சியடைந்தது. உரிய நேரத்தில் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் வைப்பாளர்களின் நம்பிக்கை மீண்டும் ஏற்பட வழிவகுத்தது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் கொடுகடன் தரத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் அறவிடமுடியா மற்றும் ஐயக் கடன் வசதிகளுக்கான சாதகமான ஒதுக்கங்கள் என்பனவற்றின் காரணமாக 2010இல் வியாபாரம் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது. அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களின் முக்கிய நிதியியல் குறிகாட்டிகள் 2010இல் மேம்பட்ட செயலாற்றத்தினை காட்டிய வேளையில் இடர்நேர்வு முகாமைத்துவக் குறிகாட்டிகள் முன்மதியுடைய மட்டங்களுக்குள் காணப்பட்டன. காப்புறுதித் துறையும் 2010இல் மேம்பட்ட செயலாற்றத்தினைக் காட்டியது.

**நிதியியல் நிறுவனங்களின் கிளை வலையமைப்பின் விரிவாக்கம் 2010இலும் தொடர்ந்தும் விரிவடைந்தது.** 84 கிளைகளும் 92 விரிவாக்க அலுவலகங்களும் 130 தன்னியக்கக்கூற்றுப் பொறிகளும் திறக்கப்பட்டமையுடன் வங்கித்தொழில் வலையமைப்பு மேலும் விரிவடைந்தது. புதிய வங்கித்தொழில் அலுவலகங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறக்கப்பட்ட 48 அலுவலகங்கள் உட்பட 67 கிளைகளும் 77 விரிவாக்க அலுவலகங்களும் மேல் மாகாணத்திற்கு வெளியே காணப்பட்டன. புதிய இரண்டு உரிமங்கள் வழங்கப்பட்டதுடன் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளின் மொத்த எண்ணிக்கை 37 இற்கு அதிகரித்த வேளையில் கிளை வலையமைப்பு இவ்வாண்டில் 98 இற்கு அதிகரித்தது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளின் 43 கிளைகள் திறக்கப்பட்டமையுடன் அவற்றின் கிளை வலையமைப்பு மேலும் விரிவடைந்தது. இதில் 13 கிளைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் திறக்கப்பட்டன.

**வங்கிகளின் பாதுகாப்பு வலையமைப்பு மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை மேம்படுத்தவதற்காக, மத்திய வங்கி அதன் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தியது.** அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள், உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கான ஆகக் குறைந்த மூலதனத் தேவைப்பாட்டினை 2010 இலிருந்து 2015 வரையான காலப்பகுதியில் வருடாந்த அடிப்படையில் படிப்படியாக அதிகரித்தல், கட்டாய வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை நடைமுறைப்படுத்தல், கடன்களை செயற்படாக் கடன்களென வகைப்படுத்துவதனைத் தளர்த்தல்,

பொதுவான கடன் இழப்புக்கான ஒதுக்கங்களைக் குறைத்தல், நிறைவேற்றுத் தொழிற்பாடுகளைப் புரிகின்ற அலுவலர்களின் பொருத்தம் மற்றும் தகுதியை மதிப்பிடுவதற்கான பிரயோகம், பட்டியலிடப்படாத உள்ளூர் தனியார் வங்கிகளை 2011 திசெம்பர் 31ஆம் திகதியளவில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிட்டுக் கொள்ளுமாறு தேவைப்படுத்தல் மற்றும் பணிகளை வெளியாருக்கு வழங்குதல் மீதான பணிப்புரை என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. வைப்புக்களை ஏற்கும் வியாபாரத்தில் ஆரோக்கியமற்ற போட்டியை தடுக்கும் பொருட்டும், பொதுமக்களின் நம்பிக்கையினைப் பாதுகாத்து உறுதிப்படுத்தும் விதத்திலும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளினால் வழங்கப்படும் வட்டி வீதங்களுக்கான ஆகக் கூடிய வீதத்தினை நிர்ணயிக்கும் ஒழுங்குவிதிகள் விடுக்கப்பட்டன. நடைமுறையிலுள்ள நிதிக் கம்பனிகள் சட்டத்திற்குப் பதிலாக புதிய நிதிக் கம்பனி வியாபாரச் சட்டத்தினை வரைகின்ற வேலைகள் அமைச்சரவை ஒப்புதலுடன் இறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2011இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பதிவு செய்யப்பட்ட சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளைப் பொறுத்தவரை முன்மதியுடன் அவற்றின் எதிர்கால வளர்ச்சிக்கு வசதியளிக்கும் விதத்தில் பகிரங்கக் கம்பனியொன்றாக பதிவு செய்வதற்கு தகுதி பெறுவதற்கான குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடும் குறைந்தபட்ச மூலதனத் தேவைப்பாடும் படிப்படியானதொரு அடிப்படையில் அதிகரிக்கப்பட்டன.

**இவ்வாண்டுப் பகுதியில், திரவ நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட ஆறு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளையும் புனரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.** முக்கியமான வழிமுறைகள், முகாமைப்படுத்துகின்ற முகவரொருவரை நியமித்தல், மூலதனத்தினை உள்ளீடு செய்து முகாமையினை பொறுப்பேற்கும் புதிய முதலீட்டாளர்களைக் கண்காணித்தல், வைப்புப் பொறுப்புக்களையும் படுகடன்களையும் பங்கு மூலதனத்திற்கு மாற்றுதல், வைப்புக்களையும் வட்டியையும் மீளமைத்தல், உண்மைச் சொத்துக்களையும் மற்றைய சொத்துக்களையும் விற்பனை செய்தல் மற்றும் செயற்படாக் கடன்களை அறவிடுவதற்கு விரைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலும், பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு வர்த்தக வங்கிகளினூடாக கொடுகடன்களை வழங்குகின்ற மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதத் திட்டம் நடைமுறையிலிருந்தது. இதன்படி, மூன்று பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் தமது வழமையான வியாபாரத் தொழிற்பாடுகளை தொடங்கக் கூடியதாக இருந்த வேளையில், இரண்டு கம்பனிகளின் முகாமைத்துவ முகவரமைப்புக்கள் இடைநிறுத்தப்பட்டன. இரண்டு பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு உபாய முதலீட்டாளர்கள் அடையாளம் காணப்பட்ட வேளையில் மற்றைய நிதிக் கம்பனிகளுக்கு முதலீட்டாளர்களாக வரக் கூடியவர்களின் விபரங்கள் பரிசீலனையின் கீழ் இருந்ததுடன் அவர்கள் பற்றி நுணுக்கமாக ஆராயும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. இடர்ப்பாட்டிலுள்ள அனைத்து நிதிக் கம்பனிகளும் 2011ஆம் ஆண்டுப் பகுதியில் முழுமையாக அவற்றின் வியாபாரத்தை மீளத் தொடங்க முடியும். அதிகாரம் பெறாமல் நிதி வியாபாரத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பான புலனாய்வுகள் தொடர்ந்தும் இடம்பெற்ற வேளையில் நிலுவையிலுள்ள வழக்குகள் தொடர்பாக நீதிமன்றத்திற்கு உதவிகள் வழங்கப்பட்டன. இதற்கு சமாந்தரமாக அதிகாரமளிக்கப்படாத நிறுவனங்களில் முதலீடுகளை மேற்கொள்வதிலுள்ள இடர்நேர்வுகள் பற்றி பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக நாடாளவிய முறையில் ஆய்வரங்குகள்/ செயலமர்வுகள் நடத்தப்பட்டன. தேசிய செய்தித்தாள்களில் விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டமை போன்ற பொதுமக்களை விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றன.

**காப்புறுதிக் கம்பனிகளுக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.** காப்புறுதிப் பூட்கையாளர்களின் நலவுரித்துக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, முன்மதியுடைய ஒழுங்குவிதிகளையும் மேற்பார்வையினையும் வலுப்படுத்து வதற்காக காப்புறுதி தொழில்துறைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கான உத்தேச திருத்தங்கள் 2010இல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அனைத்துக் காப்புறுதிக் கம்பனிகளும் பங்குச் சந்தையில் பட்டியலிடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இலண்டன் கூட்டுச் சரக்குக் குழுவினால் 2010 யூனில் இலங்கைக்கான யுத்த இடர்நேர்வு காப்புறுதிக் கட்டணம் நீக்கப்பட்டமையும் 2010 ஏப்பிறலில் பயங்கரவாதச் செயல்களின் பாதுகாப்பிற்கான காப்புறுதிக் கட்டணங்கள் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினால் 75 சதவீதத்தினால் குறைக்கப்பட்டமையும் காப்புறுதி பூட்கையாளர்களுக்கான செலவினைக் குறைக்கும்.

**கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகளுக்கான முன்னேற்ற நடவடிக்கைகள் 2010இலும் தொடர்ந்தன.** அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமைகளின் கீழ் நிறுவனங்களுக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குவதற்கான நடைமுறைகள் அவற்றின் கோரிக்கையின் மீது மாத்திரம் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை வழங்குகின்ற முறையிலிருந்தும் விலகி, அவர்களின் தற்றுணிபின்படி ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு அவர்களை இயலச் செய்யும் விதத்தில், தரமுயர்த்தப்பட்டன. பங்கேற்கும் நிறுவனங்களுக்கு கணனி வழி அதேநேர இணைப்பிகளை வழங்குவதற்காக தரமுயர்த்தப்பட்டன. லங்கா கிளியர் லிமிடெட்டிற்கு காசோலைகளை பௌதீக ரீதியில் அனுப்புவதிலுள்ள கால தாமதத்தினை நீக்குவதற்காக, கிளைகளின் மட்டத்தில் காசோலைகளின் பிம்பப்படுத்தலைப் பெற்று அந்த பிம்பங்களை லங்கா கிளியர் (பிறைவேட்) லிமிடெட்டிற்கு நேரடியாகச் சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டன.

**2010இல் கொழும்புப் பங்குச் சந்தையின் நடவடிக்கைகள் வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டத்திற்கு உயர்வடைந்ததுடன் அனைத்துக் குறிகாட்டிகளினதும் பதிவு செய்யப்பட்ட உயர்**

**செயலாற்றத்தின்படி கொழும்புப் பங்குச் சந்தை உலகின் மிகச் சிறந்த பங்குச் சந்தைகளிலொன்றாக மாறியது.** 2010இல் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் 96 சதவீதத்தாலும் மிலங்கா விலைச்சுட்டெண் 83 சதவீதத்தாலும் உயர்வடைந்த வேளையில், அனைத்து துணைத்துறை விலைச்சுட்டெண்களும் அதிகரித்தன. விற்பனை செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை நான்கு மடங்கிற்கு அதிகரித்ததுடன் நாளாந்த சராசரிப் புரள்வு மூன்று மடங்கிற்கும் கூடுதலாக உயர்வடைந்தது. சந்தை விலை வருவாய் விகிதம் மேலும் அதிகரித்ததுடன் கொழும்புப் பங்குச் சந்தையின் சந்தை மூலதனமயமாக்கல் 2010 இறுதியில் ரூ.2.2 றில்லியனை அடைந்தது. பல பங்குகளினது விலை அதிகரிப்புக்கள் உயர்வாக இருந்தமைக்கிடையிலும் மூலதன இலாபங்கள் பெறப்பட்டமையும் சந்தையில் பல உள்நாட்டு முதலீட்டாளர்கள் ஈடுபட்டிருந்தமையும் தேறிய வெளிநாட்டு விற்பனைகள் அதிகரிப்பதற்கு தூண்டுதலாக விளங்கின. 2010இல் 10 ஆரம்பப் பங்கு வழங்கல்கள் காணப்பட்டதுடன் அவை அனைத்தும் குறிப்பிடத்தக்களவிற்கு மேலதிகமாக உதவப்பட்ட வேளையில் 31 கம்பனிகள் உரிமை வழங்கல்களை மேற்கொண்டிருந்தன.

## 1.3 உலகளாவிய பொருளாதார சூழலும் தோற்றப்பாடும்[2]

**உலகளாவிய பொருளாதாரம் 1930இன் பின்னர் ஏற்பட்ட அதன் ஆழமான மந்த நிலைமையிலிருந்தும் 2010இல் படிப்படியாக மீட்சியடைந்தது.** உலகளாவிய மீட்சிக்கு தனியார் கேள்வியில் ஏற்பட்ட அதிகரிப்பும் இறைத்திரட்சி மற்றும் வெளிநாட்டு மீள்சமநிலைப்படுத்தல் தொடர்பாக எடுக்கப்பட்ட கொள்கைகளும் காரணமாக இருந்த போதும், இது, உயர்ந்தளவு தொழிலின்மை, முறையியல் சார்ந்த இடர்நேர்வு, நிதியியல் துறையில் மீண்டும் தோன்றிய அழுத்தங்கள் என்பனவற்றினால் நலிவடைந்தது. ப.நா. நிதியத்தின் உலகப் பொருளாதார தோற்றப்பாட்டின்படி, உலகின் பொருளாதாரம் 2009இன் 0.6 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 5.0 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. 2009இல் மந்த நிலைக்கு இட்டுச் சென்ற நிதியியல் குழப்ப நிலைமைகளின் பாதிப்பு குறைவடைந்து வருகின்றமையினால் தோற்றம் பெற்று வருகின்ற பொருளாதாரங்கள் 2010இல் பொருளாதார மீட்சியைப் பெற தொடர்ந்தும் தொழிற்பட்டு வருகின்றன. 2009இன் பொருளாதாரச் சரிவுகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட முன்னேற்றம் கண்ட பொருளாதாரங்கள் 3.0 சதவீதத்தினால் விரிவடையுமென மதிப்பிடப்பட்டிருக்கின்றன. இம் மிதமான வளர்ச்சி, தற்பொழுது காணப்படுகின்ற உயர்ந்த தொழிலின்மை மட்டங்களின் முக்கிய காரணமாக முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் காணப்படும் நலிவுற்ற தனிப்பட்ட உள்நாட்டுக் கேள்வியின் பெறுபேறேயாகும். யப்பானின் பொருளாதாரம் 2009இன் 6.3 சதவீதம் கொண்ட சுருக்கத்தின் பின்னர் 2010இல் 4.3 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு

**அட்டவணை 1.4 உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடுகளும் (அ)**

| விடயம் | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 2008 | 2009 | 2010 | 2011 |
| **உலக வெளியீடு** | **2.8** | **-0.6** | **5.0** | **4.4** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 0.2 | -3.4 | 3.0 | 2.5 |
| ஐக்கிய அமெரிக்கா | 0.0 | -2.6 | 2.8 | 3.0 |
| யூரோ பகுதி | 0.5 | -4.1 | 1.8 | 1.5 |
| ஐக்கிய இராச்சியம் | -0.1 | -4.9 | 1.7 | 2.0 |
| யப்பான் | -1.2 | -6.3 | 4.3 | 1.6 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 6.0 | 2.6 | 7.1 | 6.5 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 7.7 | 7.0 | 9.3 | 8.4 |
| சீனா | 9.6 | 9.2 | 10.3 | 9.6 |
| இந்தியா | 6.4 | 5.7 | 9.7 | 8.4 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **2.9** | **-10.7** | **12.0** | **7.1** |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 0.4 | -12.4 | 11.1 | 5.5 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 9.0 | -8.0 | 13.8 | 9.3 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 1.9 | -11.9 | 11.4 | 6.2 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 4.6 | -7.5 | 12.8 | 9.2 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 3.4 | 0.1 | 1.5 | 1.6 |
| தோற்றம்பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 9.2 | 5.2 | 6.3 | 6.0 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொலர்கள்) | | | | |
| எண்ணெய் | 36.4 | -36.3 | 27.8 | 13.4 |
| எண்ணெய் அல்லாதவை | 7.5 | -18.7 | 23.0 | 11.0 |
| **ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்) ஐ.அ.டொலரில்** | **3.0** | **1.1** | **0.6** | **0.7** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்

மூலம்: உலகப் பொளாதரப் தோற்றப்பாடு (சன. 2008 மற்றும் ஒத் 2007) ப.நா.நிதியம்

விரிவடைந்தது. ஐரோப்பிய பொருளாதாரங்களின் மீட்சி, பிராந்திய இறையின் உறுதிப்பாடற்ற தன்மை, நிதியியல் இணைப்புக்களின் பாதிக்கப்படக்கூடிய தன்மை என்பனவற்றினால் பாதிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக, பிராந்தியம் 2010இல் ஏறத்தாழ 1.8 சாதகமான மிதமான வளர்ச்சியை மட்டுமே பதிவு செய்தது. உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பின் காரணமாக உந்தப்பட்ட தோற்றம் பெற்றுவருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்கள் 2010இல் 7.1 சதவீதத்தினால் விரிவடைந்த வேளையில் அபிவிருத்தியடைந்து வரும் ஆசியா மதிப்பிடப்பட்ட 9.3 சதவீதத்தால் விரிவடைந்தது.

**உலகளாவிய கேள்வி படிப்படியாக மீட்சியடைந்தமையின் காரணமாக பண்ட விலைகள் குறிப்பாக 2010இன் பின்னரைப் பகுதியில் அதிகரித்தன.** முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் பணவீக்கம் 2009இன் 0.1 சதவீதத்திலிருந்து 2010ஆம் ஆண்டில் 1.5 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் பணவீக்கம் 2009இன் 5.2 சதவீதத்திலிருந்து 2010இல் 6.3 சதவீதத்திற்கு அதிகரித்தது. உலகளாவிய கேள்வி அதிகரித்து வருகின்றமைக்கிடையிலும்,

[2] இப்பிரிவிலுள்ள பகுப்பாய்வு ப.நா.நிதியத்தின் உலக பொருளாதாரத் தோற்றப்பாட்டினையும் 2010 ஒத்தோபர், 2011 சனவரி (பூரணப்படுத்தப்பட்டது) மற்றும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பனவற்றின் வெளியீடுகளையும் அடிப்படையாகக் கொண்டது.

பல வழங்கல்பக்க அதிர்வுகள் பண்ட விலைகளை மேலும் அதிகரிக்கின்றன. மோசமான வானிலை நிலைமைகளினால் முக்கியமான பல உணவுப் பண்டங்களை உற்பத்தி செய்கின்ற நாடுகளின் உணவுப்பண்ட விலைகள் அதிகரித்துள்ள வேளையில் 2010இன் பிற்பகுதியில் காணப்பட்ட புவிசார் அரசியல் உறுதிப்பாடற்ற தன்மை மசகெண்ணெய் விலைகளில் அதிகரிப்புக்களைத் தோற்றுவித்துள்ளன. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைச்சுட்டெண் 2009இன் 177.9 இலிருந்து 2010இல் 222.6 இற்கு 25.1 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் பிறென்ட் மசகெண்ணெய்யின் சராசரி விலைகள் 2009இல் பீப்பாய் 1 இற்கு ஐ.அ.டொலர் 61.83 இலிருந்து 2010இல் ஐ.அ.டொலர் 79.97 இற்கு அதிகரித்தது.

**முன்னேற்றங்கண்ட மற்றும் தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களில் காணப்படும் தொடர்ச்சியான தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைக்குப் பதிலிறுத்தும் விதத்தில் குறுங்கால வட்டி வீதங்கள் 2010இல் தொடர்ந்தும் குறைவாகவே காணப்பட்டன.** முன்னைய ஆண்டுகளில் முக்கியமான மத்திய வங்கிகளினால் மேற்கொள்ளப்பட்ட பாரிய கொள்கை வீத குறைப்புக்கள் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் பலவற்றில் கொள்கை வட்டி வீதங்களை பூஜ்யத்திற்கு அணித்தாக விளங்கச் செய்துள்ளன. எனினும். 2010இன் பிற்பகுதியில் பணவீக்க அழுத்தங்கள் மறையத் தொடங்கியதும் பல பொருளாதாரங்கள், வட்டி வீதங்களை உயர்த்துவதன் மூலம் விலை மட்டங்களின் உயர்வினைக் கட்டுப்படுத்துவதற்கு வழிமுறைளை மேற்கொண்டன. ஐக்கிய அமெரிக்கா உட்பட மற்றைய பல முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களும் 2009இன் மந்தத்திலிருந்து இன்னமும் மீண்டும் கொண்டிருக்கும் சில தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களும் மேலும் வட்டி வீத குறைப்புக்களுக்கான வசதிகள் ஏற்கனவே இல்லாமல் போய்விட்டமையினால், நிதியியல் நிலைமைகளைத் தளர்த்துவதற்கு மரபு ரீதியற்ற பல வழிமுறைகளை நாடின. அத்தகைய தூண்டல்கள், கணியம்சார் தளர்த்தல்கள்,[3] கொடுகடன் தளர்த்தல் மற்றும் கேள்விகளை உத்வேகம் பெறச் செய்து நிச்சயமற்ற தன்மைகளையும் நிதியியல் சந்தைகளில் காணப்படும் முறைமையில் இடர்நேர்வுகளையும் குறைப்பதற்கான இறைக்கொளகை விரிவாக்கம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

**பல பொருளாதாரங்களின் நாணயச் சந்தையில் உயர்ந்தளவு தளம்பல்கள் அவதானிக்கப்பட்டன.** உள்நாட்டு நாணயங்கள் விரைவாக உயர்வடைவதனை தடுப்பதற்காக உலகம் முழுவதிலுள்ள மத்திய வங்கிகள் வெவ்வேறுபட்ட அளவுகளில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் தலையிட்டன. உலகளாவிய நிதியியல் குழப்ப நிலைமைகள் கடுமையான நாணய அசைவுகளுக்கு வழிவகுத்தமையினால் 2010இன் முதலரைப் பகுதியில் இது தீவிரமடைந்தது. ஐரோப்பிய பிராந்தியத்தில் காணப்பட்ட நாட்டிற்கான படுகடன் நெருக்கடியின் காரணமாக 2010இன் முதலரைப் பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக ஸ்டேர்லிங் பவுணும் யூரோவும் கடுமையாகத் தேய்வடைந்தன. எனினும், 2010இன் பின்னரைப் பகுதியில், சீனா அதன் வெளிநாட்டுச் சொத்துக்களை பன்முகப்படுத்தியமையானது யப்பானிய யென், கொரிய வொன் மற்றும் யூரோ என்பனவற்றில் உயர்வினை விளைவித்தது. யப்பானில் தொடர்ந்து காணப்பட்ட நடைமுறைக் கணக்கு மிகையுடன் சேர்ந்து யென் கடுமையாக உயர்வடைந்தமையானது வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிடுவதற்கு யப்பானிய அதிகாரிகளைத் தூண்டியது. நாணயத்தின் சிறிதளவு மீள் மதிப்பீட்டினைத் தொடர்ந்து சீனாவும் போட்டித்தன்மையினைப் பேணுவதற்காக ரென்மிங்பி இனை சிறிதளவில் தேய்வடைவதற்கு அனுமதித்தது. யப்பானிய வங்கியினால் அறிவிக்கப்பட்ட கணியம்சார் தளர்த்தலும் ஐ.அ.டொலர் 600 பில்லியன் பெறுமதியான நீண்டகால அரச முறிகளை கொள்வனவு செய்வதற்கான ஐ.அ.பெடரல் றிசேர்வின் நடவடிக்கையும் நாணய அசைவுகளின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன.

**2010இல் அதிகரித்த வெளிநாட்டு முதலீட்டுப் பாய்ச்சல்களுடன் பெரும்பாலான தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களிலுள்ள பங்கு மூலதனமும் படுகடன் சந்தைகளும் மேம்பாடடைந்தன.** எனினும், மீட்சி தொடர்பான உறுதித்தன்மை பற்றிய கரிசனைகளின் காரணமாக ஐரோப்பிய பிராந்தியத்திலுள்ள பல பங்குச் சந்தைகளும் இழப்புக்களை அறிக்கையிட்டுள்ளன. யூரோ ஒன்றிய உறுப்பினர் நாடுகள் சிலவற்றில் காணப்பட்ட உறுதியற்ற நிதியியல் கொள்கையின் காரணமாக 2010இன் முதற் காலாண்டுப் பகுதியில் தோன்றிய நாட்டிற்கான படுகடன் நெருக்கடிகள் இப் பிராந்தியத்தின் வளர்ச்சி வாய்ப்புக்களைத் தடுத்துவிட்டன. இதன் விளைவாக, முதலீட்டாளர்கள் ஐரோப்பிய பொருளாதாரங்கள் பலவற்றிலிருந்தும் வெளியேறியதுடன் ப.நா. நிதியமும் ஐரோப்பிய மத்திய வங்கியும் ஐரோப்பிய நாட்டிற்கான படுகடன் சந்தையில் உறுதிப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு தொடர்ந்தும் முயற்சித்தன. பாதிக்கப்பட்ட நாடுகளில் முன்னொரு போதுமில்லாத திரவத்தன்மை, கொடுகடன் ஆதரவு மற்றும் கணிசமான இறை நடவடிக்கைகள் என்பன நிதியியல் குழப்ப நிலைமைகளைக் கட்டுப்படுத்தி ஐரோப்பிய பொருளாதார நடவடிக்கை மீதான அதன் மோசமான தாக்கத்தினை மிதப்படுத்தியது. 2010இன் பிற்பகுதியில், உலகளாவிய நிதியியல் சந்தைகளில் குறிப்பாக, முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் முன்னேற்றமடைவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களிலுள்ள வங்கிக் கடன் வழங்கல் நிலைமைகள் மேம்பட்ட வேளையில் இடர்நேர்வுகள் பரவுவது தொடர்ந்தும் இறுக்கமாக்கப்பட்டது.

**மீட்சி செயல்முறை இன்னமும் இடம்பெற்று வருவதனாலும் சுருக்கம் தொடர்பான கரிசனைகள் குறைவடைந்த போதும் தொழிலின்மை வீதங்கள் இன்னமும் மிக உயர்வாக**

[3]கணியம்சார் இலகுபடுத்தல் என்பது, பணச் சந்தையில் திரவத்தன்மையினை அதிகரிக்கும் பொருட்டு சந்தையிலிருந்து சொத்துக்களை வாங்குவதன் மூலமாக அதன் ஐந்தொகையின் அளவினை அதிகரிப்பதற்காக மத்திய வங்கியினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் குறிக்கிறது. இதன் மூலம் பொருளாதாரம் தூண்டப்படுவதுடன் பணச் சுருக்க அச்சுறுத்தலும் தணிக்கப்படுகின்றது. இது மரவு முறைசாராத நாணயக் கொள்கை வழிமுறையொன்றாக அண்மைய உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் போது ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்கா றிசேர்வு, இங்கிலாந்து வங்கி அவற்றுடன் இணைந்து யப்பான் வங்கியினாலும் பிரபலமாகப் பயன்படுத்தப்பட்டன. அந்நாடுகளின் கொள்கை வட்டி வீதங்கள் பூஜ்யத்தில் அல்லது அதற்க அணித்தாக இருந்தன. இதன் மூலம் இவை நாணயக் கொள்கை கருவியொன்றாகப் பயன்படுத்துவதற்கு கிடைக்காமல் இருக்கின்றன.

**விளங்குவதனாலும் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களிலுள்ள கணியம் அதிகாரசபைகளினால் நாணயம் சார் தளர்த்தல் கொள்கைக்கு நேர காலத்துடன் திரும்ப முடியாது போல் தோன்றுகின்றது.** தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்கள் பலவற்றிற்குமான முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களிலுள்ள கணியம்சார் தளர்த்தல்களின் விளைவுகள் வெளிநாட்டு மூலதனத்தின் கணிசமான உட்பாய்ச்சலை ஏற்படுத்தியதுடன் அவற்றின் செலாவணி வீதங்களையும் உயர்த்தின. மத்திய வங்கிகள் அவற்றின் நாணயங்களினது மிகையான உயர்வினூடாக ஏற்றுமதி போட்டித்தன்மை மீதான தாக்கத்தினைக் குறைப்பதற்காக அவற்றினால் எடுக்கப்பட்ட சமநிலைப்படுத்தும் நடவடிக்கைகள், தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களில் உள்நாட்டுப் பணச் சந்தையில் காணப்படும் மிகையான திரவத்தன்மையினைத் தடுப்பதற்கு குறிப்பிடத்தக்க சமநிலைப்படுத்தும் செலவுகளை தோற்றுவித்ததுடன் இப் பொருளாதாரங்கள் உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல்களை குறைப்பதனூடாகவும் முதலீடுகளின் மீது உச்ச எல்லையினை அறிமுகப்படுத்துவதனூடாகவும் மூலதனப் பாய்ச்சலைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேளையில், அவற்றின் நிதியியல் முறைமைகளும் உறுதிப்படுத்தப்பட்டன.

**பின்பற்றப்பட்ட பல்வேறு கொள்கை வழிமுறைகளுக்கும் பதிலிறுத்தும் விதத்தில் 2011இல் பொருளாதார வளர்ச்சி ஊக்கமளிக்கும் விதத்தில் இருக்குமென எதிர்பார்க்கப்பட்ட போதும், கீழ் நோக்கிய இடர்நேர்வுகள் தொடர்ந்தும் இருக்கவே செய்கின்றன.** இதுவரை, ஆசியப் பிராந்தியத்தில் பொருளாதார மீட்சி விரைவாகவும் உறுதியானதாகவும் காணப்பட்டது. தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சி குறுங்காலத்திலிருந்து நடுத்தரகாலம் வரையான காலப்பகுதியில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ப.நா.நிதியம் அதன் பிந்திய எதிர்வுகூறலில் 2011இல் உலகளாவிய வளர்ச்சி ஏறத்தாழ 4.4 சதவீதமாக இருக்குமென எறிவு செய்துள்ளமையானது, 2011இல் ஏறத்தாழ 6.5 சதவீதத்தினால் வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படும் தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களினால் வழிநடத்தப்படும் முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் வளர்ச்சி 2011இல் 2.5 சதவீதமாக இருக்குமென எறிவு செய்யப்பட்டது. எனினும், தற்பொழுது நிலவுகின்ற உயர்ந்த தொழிலின்மை வீதம், உயர்ந்த இறைப் பற்றாக்குறை, நிதியியல் சமநிலையற்ற தன்மை அதேபோன்று வட ஆபிரிக்கா, மத்திய கிழக்குப் பிராந்தியம், அதேபோன்று இயற்கை அனர்த்தம் காணமாக அண்மையில் யப்பானில் ஏற்பட்ட சம்பவம் என்பன உலகளாவிய பொருளாதார மீட்சிக்கு இன்னமும் சவால்களை ஏற்படுத்துவனவாகவேயுள்ளன. உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடைந்து வருகின்றமையினால் முக்கியமாக பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் நிலக்கரி வடிவிலான வலுவுக்கான கேள்வி நடுத்தர காலப்பகுதியில் அதிகரிக்கக்கூடும். எனினும், யப்பானின் புகுசிமாவிலுள்ள அந்நிலையங்களின் பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகள் குறுங் காலத்தில் அணு சக்திக்கான மாற்று வலு மூலமாக விளங்கும் பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் நிலக்கரிக்கான கேள்வியின் மீது அழுத்தங்களை ஏற்படுத்தாது எனத் தோன்றுகிறது. பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்ததன் விளைவாக அதிகரித்த கேள்வியைக் கவனத்திற் கொள்கையில், மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் புவிசார் அரசியல் உறுதிப்பாடற்ற தன்மை, பண்ட விலைகள் என்பனவற்றின் காரணமாக வழங்கல் பக்க அதிர்வுகள் 2010இன் மட்டங்களுக்கும் மேலேயே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் நுகர்வோர் விலைகள் ஏறத்தாழ 1.6 சதவீதத்தினால் சிறிதளவில் அதிகரிக்கும் எனவும் தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் இவ்வதிகரிப்பு ஏறத்தாழ 6.0 சதவீதத்தில் நிலைபெறும் எனவும் ப.நா.நிதியம் எறிவு செய்துள்ளது.

## 1.4 நடுத்தர கால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு, சவால்கள் மற்றும் கொள்கைகள்

**போருக்குப் பின்னர் நன்மைகள் நிகழும் என்ற எதிர்பார்ப்பு, வலுவடைந்து வரும் உலகளாவிய கேள்வி என்பனவற்றின் உதவியுடன் இலங்கைக்கான பொருளாதாரத்தின் நடுத்தர கால தோற்றப்பாடு ஊக்கமளிப்பதாகக் காணப்படுகிறது.** 2010இல் பொருளாதாரத்தில் காணப்பட்ட 8.0 சதவீதம் கொண்ட உண்மை வளர்ச்சியைத் தொடர்ந்து நடுத்தர காலத்தில் பொருளாதாரம் ஆண்டிற்கு 8 - 9 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியுடன் பெருமளவு இயலளவுப் பயன்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து கிடைக்கின்ற பாரிய பங்களிப்புடன் வேளாண்மைத் துறையில் ஏற்பட்ட விரிவாக்கம் மேம்பட்ட உற்பத்தியாக்கம், உற்பத்தி மற்றும் சந்தைப் பன்முகப்படுத்தல் மற்றும் கைத்தொழில்களின் விரிவாக்கம், சுற்றுலா, துறைமுகங்கள், போக்குவரத்து, வங்கித்தொழில் மற்றும் காப்புறுதி என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தகம் மற்றும் பணிகள் துறையில் ஏற்பட்ட விரிவாக்கம் என்பன அத்தகைய உயர்ந்த வளர்ச்சி வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான தூண்டுதல்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், சமாதானத்தின் விடியலுடன் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் ஆரம்பமாகியுள்ளமை, வரி முறைமைக்குத் தேவையான மாற்றங்களை நடைமுறைப்படுத்துகின்றமையின் மூலம் அரசாங்கத்தினால் காட்டப்படும் கடப்பாடுகள், அதேபோன்று அரச தொழில் முயற்சிகளின் மேம்பட்டு வரும் தொழிற்பாடுகள் என்பன நடுத்தர காலத்தில் உயர்ந்த வளர்ச்சியை எய்துவதற்கு உதவுகின்ற அதேவேளையில் ஒட்டுமொத்தப் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டையும் உறுதிப்படுத்துகின்றது. அதேவேளை, உயர்ந்த பொருளாதார வளர்ச்சியைப் பேணுவதற்கு முதலீடுகளை மொ.உ.உற்பத்தியின் 35 சதவீதத்திற்கு அணித்தான மட்டத்திற்கு படிப்படியாக

அதிகரிப்பது அவசியமாகவுள்ள வேளையில், நடுத்தர காலத்தில் முதலீட்டில் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்கு ஆதரவளிப்பதற்கு உள்நாட்டுச் சேமிப்புக்களை மொ.உ.உற்பத்தியின் குறைந்தது 25 சதவீதத்திற்காவது உயர்த்துவது அவசியமாகும்.

**தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல் தொடரும் என எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில், இப்பாய்ச்சலானது, அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மீதான வங்கித்தொழில் முறைமையின் கோரலுடன் சேர்ந்து மிகையான கேள்வி அழுத்தங்களைக் கட்டியெழுப்புவதனைக் கட்டுப்படுத்துவதற்காக மிக நெருக்கமாகக் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.** வழங்கல் பக்க முன்னேற்றங்கள் தொடரும் என எதிர்பார்க்கப்படுவதுடன் முன்மதியுடைய கேள்வி முகாமைத்துவக் கொள்கையுடன் சேர்ந்து நடுத்தர காலத்தில் பணவீக்கம் நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்பில் எதிர்பார்க்கப்பட்டவாறு திரண்ட இறைப் பற்றாக்குறையினையும் பொதுப்படுகடனையும் படிப்படியாகக் குறைப்பது தொடர்பாக இறை உபாயங்கள் தொடர்ந்தும் கவனம் செலுத்தும். இது, இலகுபடுத்தப்பட்ட வரி அமைப்பின் உதவியுடன் உயர்ந்த வரி இறைச் சேகரிப்புக்கள், பரந்த வரித்தளம், அரசின் மீண்டெழும் செலவினங்களைச் சிக்கனப்படுத்தல் மற்றும் முன்மதியுடைய பொதுப்படுகடன் முகாமைத்துவம் என்பனவற்றினூடாக அடையப்படவேண்டிய வேளையில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கக்கூடிய மட்டமொன்றில் அரச முதலீடுகள் பேணப்படும்.

**நடுத்தர காலத்தில் வெளிநாட்டுத்துறை வலுவானதாக விளங்கி பன்னாட்டு ஒதுக்கு நிலைமையினை 5 மாத இறக்குமதிகளுக்கான நிதியிடலுடன் கூடிய விதத்தில் பேணுவதனை இயலச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.** உலகளாவிய பொருளாதாரத்தில்

**அட்டவணை 1.5 நடுத்தர கால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு (அ)**

| குறிகாட்டிகள் | அலகு | 2009(ஆ) | 2010(இ) | எறிவுகள் 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ | ரூ.பில்லியன் | 4,835 | 5,602 | 6,440 | 7,405 | 8,513 | 9,790 |
| உண்மை மொ.உ.உ வளர்ச்சி | % | 3.5 | 8.0 | 8.5 | 9.0 | 9.5 | 9.5 |
| பணவீக்கம் - மொ.உ.உ சுருக்கி | % | 5.9 | 7.3 | 6.0 | 5.5 | 5.0 | 5.0 |
| தலைக்குரிய மொ.உ.உ | ஐ.அடொ | 2,057 | 2,399 | 2,794 | 3,200 | 3,660 | 4,190 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ % | 24.4 | 27.8 | 29.5 | 32.0 | 33.0 | 34.0 |
| உள்நாட்டு சேமிப்பு | மொ.உ.உ % | 17.9 | 18.7 | 19.9 | 23.2 | 25.0 | 27.0 |
| தேசிய சேமிப்பு | மொ.உ.உ % | 23.7 | 24.7 | 25.8 | 29.1 | 30.7 | 32.3 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐ.அடொ.மில் | -3,122 | -5,205 | -6,762 | -7,399 | -7,993 | -8,531 |
| ஏற்றுமதிகள் | ஐ.அடொ.மில் | 7,085 | 8,307 | 9,626 | 10,876 | 1,341 | 14,027 |
| இறக்குமதிகள் | ஐ.அடொ.மில் | 10,207 | 13,512 | 16,389 | 18,275 | 20,334 | 22,558 |
| பணிகள் (தேறிய) | ஐ.அடொ.மில் | 391 | 698 | 1,148 | 1,487 | 1,778 | 2,209 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஐ.அடொ.மில் | -214 | -1,418 | -2,140 | -1,953 | -1,738 | -1,500 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ % | -0.5 | -2.9 | -3.7 | -2.9 | -2.2 | -1.7 |
| திரண்ட நிலுவை | ஐ.அடொ.மில் | 2,725 | 921 | 775 | 525 | 825 | 1,325 |
| வெளிநாட்டு அலுவல்கள்சார் ஒதுக்குகள் (ஈ)(உ) | ஐ.அடொ.மில் | 5,097 | 6,610 | 8,004 | 8,938 | 9,668 | 10,281 |
| படுகடன் பண விகிதம் (ஊ) | % | 18.9 | 14.6 | 13.5 | 16.2 | 12.6 | 14.3 |
| **இறைத்துறை** | | | | | | | |
| அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ % | 15.0 | 14.9 | 15.6 | 16.3 | 16.6 | 16.7 |
| மொத்த வருமானம் | | 14.5 | 14.6 | 15.2 | 16.0 | 16.5 | 16.5 |
| கொடைகள் | | 0.5 | 0.3 | 0.4 | 0.3 | 0.2 | 0.2 |
| செலவினம் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ % | 24.9 | 22.9 | 22.4 | 21.5 | 21.3 | 21.5 |
| நடைமுறைக் கணக்க நிலுவை | மொ.உ.உ % | -3.7 | -2.1 | -0.8 | 1.0 | 1.7 | 1.6 |
| திரண்ட வரவு செலவு திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ % | -9.9 | -7.9 | -6.8 | -5.2 | -4.8 | -4.8 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ % | 5.1 | 3.6 | 4.6 | 4.2 | 3.9 | 3.9 |
| அரச படுகடன் | மொ.உ.உ % | 86.2 | 81.9 | 80.0 | 75.0 | 71.0 | 67.0 |
| **நிதியியல் துறை (ஏ)** | | | | | | | |
| ஒதுக்குப்பண வளர்ச்சி | % | 13.1 | 18.8 | 14.5 | 14.5 | 14.5 | 14.5 |
| விரிந்த பண வளர்ச்சி ($M_2b$) | % | 18.6 | 15.8 | 14.5 | 14.5 | 14.5 | 14.5 |
| அரசுக்கான கொடுகடனின் மாற்றம் | % | 57.4 | -13.1 | 42.0 | 32.4 | 25.0 | 0.0 |
| தனியார்த் துறைக்கான கொடுகடனின் மாற்றம் | % | -73.4 | 300.0 | 281.3 | 303.1 | 340.1 | 383.7 |
| தனியார்த் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி | % | -5.8 | 25.1 | 18.8 | 17.1 | 16.4 | 15.9 |

(அ) 2010 மார்ச்சு மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக் கொண்டது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை
(இ) தற்காலிகமானவை.
(ஈ) வெளிநாட்டுச் சொத்துப் பாகுபாட்டு மாற்றத்தால் 2008 இற்கான பெறுமதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன
(உ) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பெறுகைகள் நீங்கலாக
(ஊ) 2009 இல் ப.நா.நிதியத்திடம் இருந்து எதிர்பார்க்கப்படும் துணை நில் ஒழுங்கு வசதிகளின் பெறுகைகள் 2010 இலிருந்து வெளிநாட்டு அலுவல்சார் ஒழுங்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(எ) பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலான வருவாயின் சதவீதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
(ஏ) ஆண்டு இறுதிப் பெறுமதிகளின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி

மூலங்கள்: நிதி, திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி
தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்களம்

காணப்பட்ட படிப்படியான மீட்சி, மேம்பட்ட உற்பத்தியாக்கம் மற்றும் உள்நாட்டு தொழில் முயற்சிகளின் உயர்வடைந்த உற்பத்தித் தரம் என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில் ஏற்றுமதிகள் இனிவரும் ஆண்டுகளில் அதன் மேல் நோக்கிய உத்வேகத்தினைப் பேணும் என எதிர்பார்க்கப்படுகிறது. பன்னாட்டு சந்தையில் அடையப்பட்ட கவர்ச்சிகரமான விலைகள் எல்லை நிலங்களிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இதுவரை பயன்படுத்தப்படாத நிலங்களிலும் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கான ஆவலைத் தூண்டும். கைத்தொழில் ஏற்றுமதிகளும் புதிய கைத்தொழில்களின் தோற்றம், மற்றும் ஏற்கனவேயுள்ள கைத்தொழில்களின் உயர்ந்தமட்ட பெறுமதிகூட்டல் என்பனவற்றின் காரணமாக விரைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆடைக் கைத்தொழிலும் புதிய வடிவமைப்பு அம்சங்கள் உட்புகுத்தப்பட்டமை பன்னாட்டு ரீதியில் புகழ்பெற்ற வர்த்தக அடையாளப் பொருட்களை சந்தைக்கு வழங்குதல் மற்றும் இதுவரை பயன்படுத்தப்படாத சந்தைகளை விரிவாக்குதல் என்பனவற்றின் மூலம் பன்னாட்டு பெறுமதித் தொடர்களில் குறிப்பிடத்தக்க பாய்ச்சலொன்றினை எய்தியுள்ளது. உணவு மற்றும் குடிபானம், இறப்பர் உற்பத்திகள் மற்றும் பொறிகள் மற்றும் கருவிகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளை உயர்மட்டப் பெறுமதிகூட்டல்கள் மற்றும் புதிய உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றினூடாக அபிவிருத்தி செய்ய முடியும். இறக்குமதிகள் மீதான செலவினம் நாடு முழுவதிலுமுள்ள செயற்றிட்டங்களின் அபிவிருத்தி, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மீள் நிருமாண நடவடிக்கைகள், சுற்றுலாக் கைத்தொழில் மற்றும் ஏற்றுமதிச் சந்தை கைத்தொழில்களின் அபிவிருத்தி என்பனவற்றின் காரணமாக அதிகரிக்கும். மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட்டிருப்பதன் காரணமாக நீண்டகால நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகளும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நிலக்கரி வலுச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டவுடன், ஒப்பீட்டு ரீதியில் மலிவான நிலக்கரியின் இறக்குமதியுடன் பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவினம் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்படும். எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் பிராந்தியங்களில் நிலவும் புவிசார் அரசியல் பதட்டங்களும் பன்னாட்டு மசகெண்ணெய் விலைகளிலும் அதேபோன்று இலங்கையின் எண்ணெய் இறக்குமதிச் செலவிலும் அழுத்தங்களை தோற்றுவித்து அதன் மூலம் குறிப்பாக 2011இல் வர்த்தகப் பற்றாக்குறையின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தும் போல் தோன்றுகின்றது. சென்மதி நிலுவை தொடர்பான முக்கிய அபிவிருத்தியாக நடுத்தர காலத்தில் பணிகளிலிருந்தான வருவாய்கள் பதிவு செய்யும் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் விளங்கும். இதற்கு சுற்றுலா, துறைமுகம், வானூர்தி நிலையம் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பனவற்றிலிருந்தான அதிகரித்த வருவாய்கள் பக்கபலமாக இருந்தன. நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையினை தொடர்ந்து குறைத்துவிடும் வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகளின் குறிப்பிடத்தக்க மூலமாக விளங்கக் கூடிய வெளிநாட்டு வேலையாட்களின் உள்முகப் பணவனுப்பல்களின் மீது மத்திய கிழக்கில் நிலவும் அரசியல் சந்தை பதட்டம் முக்கிய தாக்கமெதனையும் கொண்டிருக்காது. அரசிற்கும் தனியார் துறைக்குமான வெளிநாட்டு நேரடி முதலீடு உள்ளிட்ட உயர்ந்த நிதியியல் பாய்ச்சல்களின் உதவியுடன் சென்மதி நிலுவை நடுத்தர காலத்தில் மிகையைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இறை ஊக்குவிப்புக்களையும் மேம்பட்ட பேரண்டப் பொருளாதாரச் சூழலையும் கவனத்தில் கொண்டு செய்யப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுத் தளர்த்தல்கள் 2011இலும் அதற்கப்பாலும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் உட்பட அரசாங்கத்திற்கும் தனியார் துறைக்குமான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை உயர்ந்தளவில் கவருமென எதிர்பார்க்கப்படுகிறது.** 2010 இறுதியில் இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து அரசாங்கம் 2009இன் ஐ.அ.டொலர் 6.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 7.1 பில்லியனை ஒன்று சேர்ந்த கடப்பாட்டுக் கட்டணமாக கொண்டிருந்தது. இக் கடப்பாடுகளுக்கான செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் காலம் 2 - 5 ஆண்டு வீச்சினைக் கொண்டிருந்ததுடன் இவற்றில் பெரும்பாலானவை உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கானவையாக இருந்தன. இது, அபிவிருத்திச் செயன்முறைகளுக்கும் மக்களின் வருவாய் மூலங்களுக்கும் வசதியளிக்கும். மேலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தொடர்ச்சியான அபிவிருத்தி வேலைகள், குறிப்பாக சுற்றுலா விடுதிகள் உள்ளிட்ட சுற்றுலாத்துறை, தொலைத் தொடர்பூட்டல், துறைமுகங்கள், சொத்து அபிவிருத்தி, வேளாண்மை மற்றும் தயாரிப்புத் துறைகள் என்பன கூடியளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**இனிவரும் ஆண்டுகளில் பொருளாதாரம் எதிர் நோக்குகின்ற முக்கிய சவால் யாதெனில் 2010இல் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க பேரண்டப் பொருளாதார மேம்பாடுகளை தக்க வைத்துக் கொள்வதேயாகும்.** 2010இல் அனைத்து முக்கிய துறைகளிலுமிருந்து கிடைத்த குறிப்பிடத்தக்க சாதகமான பங்களிப்புக்களுடன் பொருளாதார வளர்ச்சி மீள விரைவடைந்த வேளையில் பணவீக்கம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கப்பட்டது. வெளிநாட்டுத்துறை குறிப்பிடத்தக்க முறையில் செயலாற்றியதுடன் அலுவல்சார் ஒதுக்குகள் வசதியான மட்டத்தில் பேணப்பட்ட வேளையில் இறைத்திரட்சி முயற்சிகள் புலனாகக் கூடிய பெறுபேறுகளைக் காட்டின. இவ்வபிவிருத்திகளின் உதவியுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்ததுடன் தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல் அதிகரித்தது. இப் பேரண்டப் பொருளாதார சாதனைகளை சாதாரணமானவையாகக் கருதக்கூடாது என்துடன் பாரிய பொருளாதாரங்களும் பிராந்திய பொருளாதாரங்களும் பல்வேறுபட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுடன் தொடர்ச்சியாக போரிடுகின்ற இந்த வேளையில் ஒரே ஆண்டில் இலங்கை இவற்றைப் பதிவு செய்யும் ஆற்றலைக் கொண்டிருப்பது வரவேற்கத்தக்கதொன்றேயாகும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அதிர்வுகள் மற்றும் சாத்தியமான கேள்வி அழுத்தங்களுக்கு மத்தியில் நடுத்தர காலத்தில் இச் சாதனையைப் பேணுவதும் கட்டியெழுப்புவதும் கொள்கை வகுப்போரினால் எதிர்நோக்கப்படும் சவாலாக இருக்கும். பொருத்தமான கேள்வி முகாமைத்துவக்

கொள்கைகளும் அதேபோன்று வழங்கல்பக்க தடைகளை காத்திரமான முறையில் கட்டுப்படுத்துவதும் வலுவான பேரண்ட பொருளாதார உறுதிப்பாட்டிற்கு தவிர்க்கமுடியாததாகும்.

**இலங்கையின் தற்போதையதும் எதிர்பார்க்கப்படுவதுமான உயர்ந்த வளர்ச்சி உத்வேகம் தொழிலாளர் சந்தை நிலைமைகளை இறுக்கமாக்குவது பற்றிய புதிய கேள்விகளை தோற்றுவித்திருக்கிறது.** முக்கிய அடையாளங்களில், முதலாவது இலங்கையின் தொழிலின்மை வீதம் (வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நீங்கலாக) 2002இன் 8.8 சதவீதத்திலிருந்து 2010இல் 4.9 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. மற்றும் இரண்டாவது, வாரமொன்றிற்கு பணியாற்றும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை நியதிகளில் 40 மணித்தியாலத்திற்குக் கூடுதலான சதவீதமானவை 2002இன் 60.9 சதவீதத்திலிருந்து 2010இன் மூன்றாவது, காலாண்டில் 67.6 சதவீதத்திற்கு அதிகரித்திருக்கிறது. எனினும் ஏனைய தொழிலாளர் சந்தை குறிகாட்டிகள், கூலிகளின் மீது குறிப்பிடத்தக்க தாக்கமெதனையும் கொண்டிருக்காமல் தொழிலாளர் தொகுதியிலிருந்து தொழிற்படைக்கு ஆட்களை ஈர்த்துக் கொள்வதற்கானசாத்தியங்கள்கிடைக்கத்தக்கதாகவுள்ளமையினை சுட்டிக்காட்டியது. குறிப்பாக, தொழிற்படைப் பங்கேற்பு வீதம் அதாவது தொழில் புரியக்கூடிய வயதுக் குடித்தொகையின் சதவீதமாக பொருளாதார ரீதியில் தொழிற்படக்கூடிய குடித்தொகை 2002இன் 50.6 சதவீதத்திலிருந்து 2010இல் 48.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, அதிகரிக்கின்ற தொழிலாளர் கிடைப்பனவுடன் சந்தை நிலைமைகள் மாற்றமடைகின்ற போக்கினைக் காட்டின. தொழில்புரிபவர்களில் கைத்தொழில் துறையும் பணிகள் துறையும் முறையே 24.2 சதவீதத்தினையும் 43.1 சதவீதத்தினையும் கொண்டிருந்த வேளையில் வேளாண்மைத் துறையிலுள்ள ஊழியர்களின் சதவீதம் இன்னமும் உயர்வாக 32.7 சதவீதத்திற்குக் காணப்பட்டது. வேலை செய்யும் மணித்தியாலங்களின் அதிகரிப்பு கீழ் உழைப்பாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையினைக் காட்டிய வேளையில் இது இன்னமும், குறிப்பாக வேளாண்மைத் துறையில் கடுமையான கரிசனைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. பொறி மயப்படுத்தல் உட்பட வேளாண்மை உற்பத்தியாக்கத்தில் ஏற்பட்டு வரும் முன்னேற்றங்கள் வேளாண்மையில் தற்பொழுதுள்ள தொழிற்படையின் பெரும் பங்கினை வேளாண்மைத் துறையிலிருந்து விரட்டி விடக்கூடிய வேளையில் தற்பொழுது இடம்பெற்று வரும் உட்கட்டமைப்பு அபிவிருத்திகள், குறிப்பாக வீதி வலையமைப்பின் முன்னேற்றங்கள் பெருமளவு தொழிலாளர் நகர்விற்கு வசதியளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையின் பழைய தொழில் ஒழுங்குவிதிகள் தற்போதைய தசாப்தங்களின் தொடக்கத்தில் பூரணப்படுத்தப்பட்ட போதும் சட்ட ரீதியான மற்றும் சமூகத் தடைகள் மற்றும் கிடைக்கத்தக்க தேர்ச்சிக்கும் தேவையான தேர்ச்சிக்குமிடையிலான பொருத்தப்பாடின்மை என்பனவற்றின் காரணமாக தொழிலாளர் நெகிழ்ச்சித்தன்மை இன்னமும் குறைவாகவேயுள்ளது. பெருமளவு தொழிலாளர் நகர்விற்கு அதேபோன்று தொழிலாளர் கிடைப்பனவிற்கும் வசதியளிக்கக்கூடிய சில சாத்தியமான கொள்கை வழிமுறைகளாக, தொழிலாளர் தேவைப்பாடுகளைக் குறைக்கக்கூடிய கணனி மயப்படுத்தல் உள்ளிட்ட புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுவதனை ஊக்குவிக்கின்ற வேளையில் நெகிழ்ச்சிமிக்க பணி நேரங்களை அறிமுகப்படுத்தல், பகுதி நேர வேலைகளை ஊக்குவித்தல், உயர்தர குழந்தை நலக் காப்பகங்களை வழங்குதல், பள்ளிக்கூட நேரத்திற்குப் பின்னர் பிள்ளைகளின் நலக் கவனிப்பு போன்றவற்றின் மூலம் பணிபுரியும் பெற்றோர்களுக்கு வசதியளித்தல், சமூகப் பாதுகாப்பு வலையமைப்பினை வலுப்படுத்துதல், உட்கட்டமைப்பினை குறிப்பாக, நகரங்களுக்குள்ளும் நகரங்களுக்கிடையிலும் போக்குவரத்துப் பணிகளை தொடர்ச்சியாக முன்னேற்றுதல் அதேபோன்று வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களுக்குச் செல்வோரை சாத்தியமானளவிற்குக் குறைத்தல் போன்றவற்றின் மூலம் உள்நாட்டில் தொழில் கிடைப்பனவினை அதிகரித்தல் என்பன காணப்பட்டன. தரம் மற்றும் சந்தைத் தேவைப்பாடுகளுடன் தொடர்பான நியதிகளில் பள்ளிக்கூட மற்றும் மூன்றாந்தர கல்விப் பாடவிதானங்களை பூரணப்படுத்தல் என்பனவற்றினூடாக கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதும் தொழிலாளர் நகர்வினை உயர்த்தும்.

**2009இன் நடுப்பகுதியில் மோதல்கள் முடிவடைந்தமையின் காரணமாக, பொருளாதாரம் உயர் வளர்ச்சிப் பாதையை நோக்கி சுமூகமாக முன்னேற்றமடையத் தொடங்கியதுடன் பொருளாதாரத்தில் காணப்பட்ட மிகையான இயலளவு அதாவது எதிர்க்கணிய வெளியீட்டு இடைவெளி படிப்படியாக குறுக்கமடையத் தொடங்கியது.** மோதல் இடம்பெற்ற காலப்பகுதியில், மோசமான பாதுகாப்பு நிலைமைகளின் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்கள் இரண்டினதும் விளைவாக இலங்கையின் உற்பத்தியாக்க இயலளவும் உற்பத்தியாக்க மூலவளங்களும் பெருமளவிற்குக் குறைப் பயன்பாட்டினையே கொண்டிருந்தன. எனினும் 2009இன் நடுப்பகுதியிலிருந்து குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் நில மற்றும் கடல் மூலவளங்கள், குறிப்பாக இராணுவ ஆளணியினருக்கான தேவை குறைவடைந்தமையின் மூலம் பிரதேசங்களுக்கிடையேயான தொழிலாளர்களின் பெருமளவு நகர்வு, ஏற்கனவேயுள்ள மூலதனங்களை உச்சமட்டத்தில் பயன்படுத்துவதன் மூலம் மூலதனம், பௌதீக உட்கட்டமைப்பிற்கான சேதங்கள் முடிவிற்கு வந்தமை, வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள் தனியார் துறைக்கு விடுவிக்கப்பட்டமை என்பன பொருளாதார நடவடிக்கைகளுக்கான உற்பத்தியாக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வெளியீட்டு இடைவெளியினைக் குறைப்பது பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களுக்கான இடர்ப்பாட்டு அறிகுறிகளைக் காட்டுகின்ற வேளையில் மூலவளங்கள் பெருமளவிற்கு கிடைக்கத்தக்கதாக இருக்கின்றமை உற்பத்திக்கான சாத்தியங்களை வெளியிலிருந்து முன்னோக்கித் தள்ளுவதன் மூலம் உள்ளார்ந்த வெளியீடுகளை உயர்த்தி இலங்கையின் வளர்ச்சிச் சாதனையில் குறிப்பிடத்தக்களவு அமைப்பியல் தகர்வொன்றினை குறித்துக்காட்டுகின்றது. பொதுவான விலை மட்டங்களில் ஏற்படுகின்ற தளம்பல்களைத் தவிர்க்கும் பொருட்டு நடுத்தர காலத்தில் உண்மையான மற்றும் சாத்தியமான வெளியீடுகளில் ஏற்படும் சமகால முன்னேற்றங்களை முகாமைப்படுத்துவது. பொருளாதாரத்தினால் எதிர்நோக்கப்படும் இன்னொரு முக்கிய சவாலாகும்.

**அரசிறைச் சேகரிப்புக்கள் மற்றும் செலவின முகாமைத்துவம் இரண்டிலும் ஏற்பட்ட முன்னேற்றங்களுடன் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2009இன் மொ.உ.உற்பத்தியின் 9.9 சதவீதத்திலிருந்து 2010இல் மொஉ. உற்பத்தியின் 7.9 சதவீதத்திற்குக் குறைப்பதன் மூலம் அரசாங்கம் இறைத் திரட்சிக்கான அதன் கடப்பாட்டினை எடுத்துக்காட்டியது.** மத்திய வங்கி வசமிருந்து திறைசேரி உண்டியல்களில் பெரும் பங்கை இளைப்பாறச் செய்ததன் மூலமும், வர்த்தக வங்கிகளிலிருந்தான உயர்ந்த செலவுகளைக் கொண்ட கடன்பாடுகளில் சிலவற்றை மீள்கொடுப்பனவு செய்தமையின் மூலமும் அரசாங்கம் அதன் வங்கித்தொழில் துறைக்கான வெளிப்படுத்துகைகளைக் குறைத்துக் கொண்டமையின் மூலம் தனியார் முதலீடுகளுக்கு மூலதனங்களை விடுவிப்பது குறைவடைந்தது. தனியார் துறைக்கான கொடுகடன் மீள அதிகரித்தமையுடன், இறைத்திரட்சி 2010இல் பொதுவாக நாணய விரிவாக்கத்தினை வங்கி சரியான பாதையில் வைத்திருப்பதற்கு அதற்கு உதவிய போதும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் அதிகரித்தமையானது கரிசனைகளைத் தோற்றுவித்தது. இறைத்திரட்சி செய்முறை தடம்புரளாது செய்வதற்கு இனிவரும் ஆண்டுகள் தொடர்ந்தும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இது தொடர்பாக மோதல்கள் இடம்பெற்ற ஆண்டுகளில் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட சடுதியான நிதித் தேவைகள் இப்பொழுது இல்லாமையானது சிறந்த செலவிடலை இறை அதிகாரிகள் திட்டமிடுவதற்கு உதவியாக அமையும். அதேநேரம் அரசாங்கம் வரிகளை இலகுபடுத்தி வரித் தளத்தினை விரிவாக்குவதன் மூலம் நடுத்தர காலத்தில் வரிச் சேகரிப்பினை உயர்த்தக்கூடிய மாற்றங்களை அறிமுகப்படுத்தல், வரிச் சலுகை அமைப்பினை ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் வரி நிருவாகத்தினை வலுப்படுத்தல் என்பனவற்றின் மூலம் வரி அமைப்பில் காணப்படும் கால தாமதத்தினை ஏற்படுத்தும் பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் வெளிப்படையான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன் மூலம் திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 2011இன் மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதத்திற்கு மேலும் குறைக்கப்படுமெனவும் நடுத்தர காலத்தில் 5 சதவீதத்திற்குக் குறைக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுவதுடன் வரவு செலவுத்திட்டத்திற்கான தேறிய உள்நாட்டு நிதியிடல் திட்டமிடப்பட்டவாறு தொடர்ந்திருக்கும். இறைத்திரட்சிச் செயற்பாடுகள் நாணயக் கொள்கையின் காத்தரமான நடத்தைக்கு உதவியாக அமையுமென்பதுடன் கேள்வியால் தூண்டப்படும் பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்தவும் உதவும்.

**அரச இறைத் தொழிற்பாடுகள் மீதான அழுத்தத்தினைக் குறைப்பதற்கும் மிகையான நாணய விரிவாக்கத்தினை தடுப்பதற்கும் அரசதுறைத் தொழில் முயற்சிகளின் செயலாற்றத்தில் முன்னேற்றங்களை தொடர்வதும் அவற்றை வலுப்படுத்துவதும் அவசியமாகவுள்ளது.** பன்னாட்டு மசகெண்ணெய் விலைகளின் தளம்பல்களுக்கு அவை உள்ளாகும் தன்மை, உள்நாட்டு விலை அசைவுகளின் மீது அவற்றின் நேரடியான தாக்கம் என்பனவற்றின் காரணமாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இலங்கை மின் சபையும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு உட்பட வேண்டுமென்று நீண்ட காலமாக கருத்துத் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. வலு உருவாக்கத்திற்கு உயர்ந்த செலவினைக் கொண்ட பெற்றோலியத்தின் மீது தங்கியிருக்கும் தன்மை குறைவடைந்தமையுடன் இலங்கை மின் சபையினைப் பொறுத்தவரை சில உபாய ரீதியான முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. திட்டமிடப்பட்ட முன்னேற்றங்களைத் தொடர்வது அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் மீதான அதன் சுமையைக் குறைக்கும். பன்னாட்டு எண்ணெய் விலைகளில் அடிக்கடி ஏற்படும் தளம்பல்களினாலும் உள்நாட்டு விலைகளில் செய்யப்படும் குறைவானதும் தாமதமானதுமான சீராக்கங்களினாலும் நேரடியாகப் பாதிக்கப்படும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பன்னாட்டு சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கத்தக்க விதத்தில் அதன் நிறுவன ரீதியான கட்டமைப்பில் அவசரமான மேம்பாடுகளை வேண்டி நிற்கின்றது. அத்துடன் விலைகளின் ஏதேனும் சீராக்க மந்தத் தன்மை குறுங்கால தளம்பல்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின் சபை என்பனவற்றிற்குப் புறம்பாக ஒன்றில் தாழ்ந்த வினைத்திறனுடன் அல்லது தொழிற்படாதிருக்கும் அரசிற்குச் சொந்தமான பல தொழில் முயற்சிகள் காணப்படுகின்றன. அரசின் மீதான இத்தொழில் முயற்சிகளின் மிகையான சுமையினை ஒழிக்கும் பொருட்டு ஒன்றில் அரசாங்கத்தின் கீழ் அல்லது தனியார்துறை பங்கேற்பின் கீழ் அவற்றை ஆற்றல் வாய்ந்தனவாக்குவதற்கு மேலும் தாமதமின்றி அவற்றினை மீழெழுச்சிப்படுத்துவது அவசியமானதாகும். உபாய தொழில் முயற்சிகளை முகாமைப்படுத்துவதில் காணப்படும் இன்னொரு முக்கிய சவால் யாதெனில் நிபுணத்துவமும் முகாமைத்துவ தேர்ச்சியும் கொண்டவர்கள் குறைவாக இருப்பதாகும். இது கல்வி முறைமையினை சீர்திருத்ததுவதன் மூலமாக மனித மூலதனத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

**2010இன் பின்னரைப் பகுதியிலும் 2011இல் இதுவரையிலும் காணப்பட்ட பன்னாட்டு பண்ட விலைகளின் அசைவுகள், குறிப்பாக மசகெண்ணெயின் அசைவுகள் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கு ஏற்படக்கூடிய சவால்களை மீண்டுமொரு முறை எடுத்துக்காட்டியுள்ளன.** வட ஆபிரிக்காவிலும் மத்திய கிழக்கிலும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் காணப்பட்ட புவிசார் அரசியல் குழப்பங்களும் யப்பானிலும் மற்றைய நாடுகளிலும் மிக அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களும் 2010இல் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 80 ஆகக் காணப்பட்ட விலைகளை 2011 மாச்சில் பீப்பாய் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 110இற்கு உயர்த்தின. 2011இல் உலகளாவிய கேள்வியில் மீட்சிகள் எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் வலு விலைகளில் சில அதிகரிப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டன. பன்னாட்டு முகவர்களினால் மேற்கொள்ளப்பட்ட வலு விலைகளின் எறிவுகள் இவ்வாண்டின் தொடக்கத்தில் உறுதியாக இருக்கும் போல் தோன்றாததனை அண்மைய போக்குகள் காட்டின. உள்நாட்டு விலை மட்டங்களில் ஒரே

## சிறப்புக்குறிப்பு 2 — வியாபாரம் செய்வதனை இலகுபடுத்தல் தொடர்பான தரமிடல்

கம்பனித்துறை பொருளாதார அபிவிருத்தியில் முக்கிய பங்கை வகிக்கிறதென்பது பரவலாக ஏற்கப்பட்டுள்ளது. எனவே, விரைந்த அபிவிருத்தியை வேண்டி நிற்கும் அரசாங்கங்கள் நாட்டில் கம்பனித் துறையை ஆளுகைப்படுத்தும் பொருத்தமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு சொத்துரிமைகளை நிலைநாட்டி தெளிவுபடுத்தும், பிணக்குகளைத் தீர்ப்பதில் செலவைக் குறைக்கும், பொருளாதார ரீதியில் தங்கியிருப்பதன் எதிர்வுகூறலை அதிகரிக்கும் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கெதிரான ஏற்பாடுகளுடன் ஒப்பந்த ரீதியிலான பங்காளர்களை வழங்கும் சட்டங்கள் உள்ளிட்ட சிறந்த சட்டங்கள் தேவைப்படுகின்றன. பொருத்தமான விதிகள் இருப்பது வியாபாரத்தின் ஆற்றலை அதிகரிப்பது மட்டுமன்றி பொருளாதார மற்றும் நிதியியல் நெருக்கடிகளின் போது அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையையும் அதிகரிக்கிறது.

வியாபாரம் செய்தல் செயற்றிட்டம் உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தால் 9 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. அதன் முக்கிய இலக்கு யாதெனில் வியாபாரத்துக்கான ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை விளங்கிக் கொள்ளல் மற்றும் மேம்படுத்தலுக்கான குறிக்கோள் அடிப்படையை வழங்குவதாகும். வியாபாரம் செய்தல் 2011 தொழில் முயற்சிகளுக்கான வேறுபாட்டை ஏற்படுத்தல் என்பது வியாபாரச் செயற்பாட்டை அதிகரிக்கும் மற்றும் அதைக் கட்டுப்படுத்தும் ஒழுங்குவிதிகளை புலன்விசாரணை செய்யும் ஆண்டறிக்கைகள் தொடரின் எட்டாவது ஆகும். வியாபாரம் செய்தல், இக் காலப்பகுதியில் ஆப்கானிஸ்தானிலிருந்து சிம்பாப்வே வரையான 183 பொருளாதாரங்களிடையே ஒப்பிடத்தக்க வியாபார ஒழுங்குவிதிகள் மற்றும் சொத்துரிமைகளின் பாதுகாப்பு தொடர்பான அளவீட்டுக் குறிகாட்டிகளை வெளிப்படுத்துகிறது. வியாபார வரலாற்றின் 9 கட்டங்களைப் பாதிக்கும் ஒழுங்குவிதிகளின் தொகுதி: வியாபாரத்தை ஆரம்பித்தல், கட்டடவாக்க அனுமதிகளைக் கையாளல், சொத்தைப் பதிவு செய்தல், கொடுகடனைப் பெறல், முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல், வரிகளைச் செலுத்துதல், எல்லைகளுக்கப்பால் வர்த்தகம் செய்தல், ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் வியாபாரத்தை மூடுதல். வியாபாரம் செய்தல் 2011 இலுள்ள தரவு 2010 யூன் 1இல் உள்ளவாறானதாகும். அனைத்து விடயங்களுக்கும் சமமான நிறைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஒட்டுமொத்தச் சுட்டெண் 9 விடயங்களில் ஒவ்வொன்றிலும் நூற்றுமானத் தரமிடலின் சாதாரண சராசரி மீதான தரமிடலாகக் கணிக்கப்படுகிறது. வியாபாரத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டு வகையான தரவு பரிசீலிக்கப்படுகிறது. முதலாவது, சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கையில் இரண்டாவது கால மற்றும் அசைவுக் குறிகாட்டிகளாகும். வியாபாரத்தின் ஒவ்வொரு கட்டத்துக்கான பரிசீலனை செய்யப்பட்ட குறிகாட்டிகள் பின்வரும் அட்டவணை சி 2.1இல் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

வியாபாரம் செய்தல் தரமிடலுக்கான தரவு பல்கலைக்கழக ஆலோசகர்களுடன் இணைந்து உலக வங்கியின் "வியாபாரம் செய்தல் குழு" ஆல் வடிவமைக்கப்பட்ட வினாக்கொத்தினூடாக சேகரிக்கப்படுகிறது. இவ் வினாக்கொத்துக்கான (தனிச் சிறப்பான) பதிலிறுப்பாளர்களில் வழக்கறிஞர்கள், வியாபார ஆலோசகர்கள், கணக்காளர்கள் மற்றும் தொடர்பான நாட்டின் அரச அலுவலர்கள் போன்ற உள்ளூர் திறமைசாலிகள் உள்ளடங்குகிறார்கள். ஒன்றையொன்று பாதிக்கும் பல செயற்பாடுகள் தரமிடல் தொகுப்பாளர்களால் நடத்தப்படுவதுடன் தரமிடல்கள் இறுதிப்படுத்த முன்பு இப் பதிலிறுப்புக்கள் மற்றும் தரவு ஆரோக்கியத்துக்காக பரீட்சிக்கப்பட்டது. குறிப்பிட்ட நாடொன்றின் தரமிடல் அது சீர்திருத்தங்களை தானாக மேற்கொள்ளும் போது மட்டுமன்றி ஏனைய நாடுகள் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தும் போதும், தரமிடலுக்கு புதிய நாடுகள் அறிமுகப்படுத்தப்படும் போதும், தரமிடல் பிரமாணத்தில் முறைமையியல் மாற்றங்கள் காணப்படும் போதும் மாறலாம். 2011இற்கான தரமிடலின்படி, அதியுயர் தரமிடலை (இல.1) சிங்கப்பூர் அடைந்திருக்கையில் இலங்கை 183 பொருளாதாரங்களுள் 102 ஆவதாக தரமிடப்பட்டது. மோசமாகச் செயலாற்றும் நாடாக சாட் (183) விளங்கியது.

### வியாபாரம் செய்தல் தொடர்பான தரமிடலின் குறைபாடுகள்

இத் தரமிடலில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. நிறுவனங்கள் அல்லது முதலீட்டாளர்கள் அல்லது போட்டித்தன்மை மீதான தாக்கத்துக்கு அவசியமான பல எண்ணிக்கையான காரணிகளில் சிலவற்றை மட்டுமே தரமிடல் உள்ளடக்குகிறது என்பதைக் கவனத்திற் கொள்வது மிக முக்கியமானதாகும். பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு, பாதுகாப்பு, நிறுவனங்களின்

### அட்டவணை சி.கு. 2.1 — வியாபாரம் செய்தல் குறிகாட்டிகள் 2011

| | |
|---|---|
| 1 | **வியாபாரத்தை ஆரம்பித்தல்**<br>புதிய வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான நடைமுறைகள், காலம், செலவு மற்றும் செலுத்தப்பட்ட ஆகக் குறைந்த மூலதனம் |
| 2 | **கட்டடவாக்க அனுமதிகளைக் கையாளல்**<br>நடைமுறைகள், கட்டடவாக்க அனுமதிகளைப் பெறுவதற்கான காலம் மற்றும் செலவு, பரீட்சிப்புக்கள் மற்றும் பொது வசதிகள் தொடர்புகள் |
| 3 | **சொத்தைப் பதிவு செய்தல்**<br>வர்த்தக உண்மைச் சொத்தை மாற்றுவதற்கான நடைமுறை, காலம் மற்றும் செலவு |
| 4 | **கொடுகடனைப் பெறல்**<br>சட்ட உரிமைகள் சுட்டெண்ணின் பலம், கொடுகடன் தகவல் சுட்டெண்ணின் ஆழம் |
| 5 | **முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல்**<br>முதலீட்டாளர் பாதுகாப்புச் சுட்டெண்ணின் பலம்: வெளிப்படுத்தல் சுட்டெண்ணின் அளவு, பணிப்பாளர் பொறுப்பு சுட்டெண்ணின் அளவு மற்றும் ஒவ்வொரு பங்குடமையாளருக்கும் பொருத்தமான சுட்டெண் |
| 6 | **வரிகளைச் செலுத்துதல்**<br>வரிக் கொடுப்பனவுகளின் எண்ணிக்கை, வரிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கும் கோவைப்படுத்துவதற்கும் மற்றும் வரிகளைச் செலுத்துவதற்குமான காலம், அனைத்து வரிகளுக்கு முன் பெறப்பட்ட இலாபத்தின் பங்காக மொத்த வரிகள் |
| 7 | **எல்லைகளுக்கப்பால் வர்த்தகம் செய்தல்**<br>ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதற்கான ஆவணங்கள், காலம் மற்றும் செலவு |
| 8 | **ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல்**<br>வர்த்தகப் பிணக்கைத் தீர்ப்பதற்கான நடைமுறைகள், காலம் மற்றும் செலவு |
| 9 | **வியாபாரத்தை மூடுதல்**<br>கடன்தீராற்றல் அற்ற நிலையில் மீட்சி வீதம் |

மூலம்: http://www.doingbusiness.org

பலம், உட்கட்டமைப்பின் தரம், உள்நாட்டுச் சந்தையின் அளவு, ஊழல் மற்றும் தொழிற்படையின் தேர்ச்சிகள் கவனத்திற் கொள்ளப்படாத காரணிகளுள் சிலவாகும். குறிப்பாக, இது அண்மைய நிதியியல் நெருக்கடியின் முக்கிய காரணிகளில் ஒன்றான நிதியியல் துறையின் வலுவற்ற தன்மையின் உண்மை நிலையைக் கவனத்திற் கொள்கையில் கடுமையான குறைபாடாகக் கருதக்கூடிய நிதியியல் துறையின் பலத்தை கவனத்தில் கொள்ளவில்லை. இது ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை அளவிடுகின்ற போதிலும் இது பொருளாதாரத்தில் அனைத்து ஒழுங்குமுறைப்படுத்தல் இலக்குகளையும் அளவிடவில்லை. வியாபாரத்தின் கட்டங்களைக் கவனத்திற் கொள்கின்ற போதிலும் இது அனைத்து ஒழுங்குவிதிகளையும் உள்ளடக்கவில்லை. இன்னுமொரு குறைபாடு யாதெனில் நாட்டின் மிகப் பெரிய பொருளாதார நகரத்தில் இருக்கும் கம்பனி எதிர்கொள்ளும் நிலைமைக்கு மட்டுமே பொருத்தமானமாகவும் வியாபாரத்தின் (உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தரகால பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட கம்பனிகள்) குறிப்பிட்ட வடிவத்துக்கு மட்டுமே உரித்தாயிருப்பதால் வியாபாரத்தின் (தனி உரிமையாளர், பங்குடமைகள் போன்றவை) ஏனைய வடிவங்களில் காணப்படும் நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பதாகும். நீதிமன்றத் தீர்ப்பின் குறிப்பிட்ட அளவும் தரமிடலில் சம்பந்தப்படுகிறது. தரமிடலைக் கணிக்கையில் பின்வரும் எடுகோள் மேற்கொள்ளப்படுகிறது. தொழில் முயற்சியாளர்கள் தேவையான அனைத்துத் தகவலையும் தம்வசம் வைத்திருப்பதனால் அதைத் தேடுவதற்கு நேரத்தைச் செலவழிக்க வேண்டியதில்லை. உண்மையில் இது அவ்வாறல்ல என்பதுடன் தகவலைத் தேடுவதற்கு குறிப்பிடத்தக்க முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

### வியாபாரம் செய்தல் தொடர்பான தரமிடலை மேம்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள்

அதன் குறைபாடுகளுக்கு மத்தியிலும், வியாபாரம் செய்வது தொடர்பான தரமிடல் அடிப்படை அளவீட்டுக் குறியீட்டுக்கு மிகவும் பயனுடையதாகும். தரமிடல் தெரிந்தெடுக்கப்பட்ட துறைகளில் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை மதிப்பிடுகிறது. ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட சூழல் பொருளாதாரத்தில் முறைசார் துறை வளர்ச்சிக்கு உதவுகையில் கடுமையான ஒழுங்குமுறைப்படுத்தல் சூழல் வியாபாரம் முறைசாராத துறையில் தொடர்ந்து இருப்பதை வற்புறுத்துகிறது. முறைசாராத் துறை நிறுவனங்கள் விரைவாக வளர்ச்சியடைதல், கூடியளவு உற்பத்தித்திறன் கொண்டதாக இருத்தல், கூடிய தொழிலாளர்களை தொழிலுக்கமர்த்தல் மற்றும் கொடுகடனைப் பெறுவதற்கான சிறந்த வசதி ஆகியவற்றை நோக்கிச் செல்வதால் பொருளாதாரத்துக்குக் கூடியளவு நன்மைகளைக் கொண்டு வருகிறது. வர்த்தகத் துறையில், நாட்டின் ஒப்பந்தம் செய்யும் சூழல் ஒப்பீட்டு நன்மையின் மூலமாக விளங்குகையில் கொடுகடன் துறையில் கொடுகடன் பணியகங்கள் ஊடாக கூடியளவிலான தகவலைப் பகிர்ந்து கொள்ளல் கூடிய வங்கி இலாபகரத்தன்மை மற்றும் குறைந்த வங்கி இடர்நேர்வுகளுடன் இணைந்து காணப்படுகிறது. வியாபாரம் செய்வது தொடர்பான தரமிடல் வெளிநாட்டு முதலீட்டுக்குரித்தான ஒழுங்குவிதிகளில் கவனம் செலுத்தாத போதிலும் தரமிடல் குறிப்பிட்ட நாடொன்றில் முதலிடுவதற்கு தீர்மானிக்க முன்பு வெளிநாட்டு முதலீட்டாளர்களால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் குறிகாட்டிகளுள் ஒன்றாகும். எனவே, நாட்டின் தரமிடலை மேம்படுத்துவது கூடிய வெளிநாட்டு முதலீட்டைக் கவரும் போக்கைக் கொண்டிருக்கும்.

### இலங்கையின் வியாபாரம் செய்தல் தொடர்பான தரமிடல்

2011இல் இலங்கையின் தரமிடல் 183 பொருளாதாரங்களினுள் 102 ஆக விளங்கியது. 2011 அறிக்கையில் வியாபாரத்தின் 9 கட்டங்களில் மதிப்பிடப்பட்ட அதன் தரமிடல்கள் கீழேயுள்ள அட்டவணை சி 2.2இல் தரப்பட்டுள்ளது.


வெவ்வேறான கட்டங்களில் இலங்கையின் செயலாற்றம் குறிப்பிடத்தக்களவில் மாறுபடுவது புலனாகிறது. குறிப்பாக, கட்டட அனுமதிகளைக் கையாளல், சொத்தைப் பதிவு செய்தல், வரிகளைச் செலுத்துதல், ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல் ஆகிய கட்டங்களில் அதன் செயலாற்றம் மோசமாகக் காணப்படுவதால் அதன் தரமிடல்கள் 183 நாடுகளினுள் 100 இற்கும் கூடுதலாக விளங்குவதால் நாட்டின் ஒட்டுமொத்தத் தரமிடலைக் குறைக்கிறது. உண்மையிலேயே, கட்டடவாக்க அனுமதிகளைக் கையாளல் மற்றும் சொத்தைப் பதிவு செய்தல் துறைகளில் மோசமாகச் செயலாற்றும் நாடான "சாட்" ஐ விடவும் இது மோசமாகச் செயலாற்றுகிறது. எந்தவிதமான சீர்திருத்த உபாயத்தையும் இத் துறைகளில் ஒருமுகப்படுத்த வேண்டும்.

அட்டவணை சி.2.2
**சிறந்த மற்றும் மோசமாகச் செயலாற்றும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் வியாபாரம் செய்தல் 2011இல் இலங்கையின் தரமிடல்**

| தரமிடல் | வியாபாரம் செய்தல் 2011 | | |
|---|---|---|---|
| | சிங்கப்பூர் | இலங்கை | சாட் |
| **இலகுவாக வியாபாரம் செய்தல்** | **1** | **102** | **183** |
| வியாபாரத்தை ஆரம்பித்தல் | 4 | 34 | 182 |
| கட்டடவாக்க அனுமதிகளைக் கையாளல் | 2 | 169 | 101 |
| சொத்தைப் பதிவு செய்தல் | 15 | 155 | 137 |
| கொடுகடனைப் பெறல் | 6 | 72 | 152 |
| முதலீட்டாளர்களைப் பாதுகாத்தல் | 2 | 74 | 154 |
| வரிகளைச் செலுத்துதல் | 4 | 166 | 179 |
| எல்லைகளுக்கப்பால் வர்த்தகம் செய்தல் | 1 | 72 | 171 |
| ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தல் | 13 | 137 | 164 |
| வியாபாரத்தை மூடுதல் | 2 | 43 | 183 |

மூலம்: http://www.doingbusiness.org

வரைபடம் சி.கு. 2.1 இலங்கையின் வியாபாரம் செய்தல் தரமிடல்: தெரிவுசெய்யப்பட்ட ஆசிய பொருளாதாரங்களுடனான ஒப்பீடு




கீழேயுள்ள வரைபடம் சி 2.1 இலங்கையை தெரிந்தெடுக்கப்பட்ட ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகிறது. பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 19 நாடுகளினுள் இலங்கையின் செயலாற்றம் 10 இற்கும் குறைவாகக் காணப்படுகிறது. அவை சிங்கப்பூர், ஹொங்கொங், தென் கொரியா, தாய்லாந்து, மலேசியா, மொங்கோலியா, வியட்னாம், சீனா மற்றும் பாக்கித்தான் மற்றும் மாலைதீவு போன்ற தெற்காசிய நாடுகளாகும். வர்த்தகத்தில் இலங்கையின் போட்டியாளர்களில் சில இத் தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் இலங்கை அவற்றைக் காட்டிலும் செயற்படுவது கரிசனைக்குரிய விடயமாகும்.

**இலங்கையின் வியாபாரம் செய்தல் தொடர்பான தரமிடலை மேம்படுத்துதல்**

2014ஆம் ஆண்டளவில் இலங்கை அதன் வியாபாரம் செய்தல் தொடர்பான தரமிடலை மேம்படுத்துவதை இலக்கு வைத்துள்ளதென்பதை அதிமேதகு சனாதிபதி அவர்கள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கூறியுள்ளார். இது பாரிய சவாலாக விளங்குவதுடன் இதற்கு அனைத்து ஆர்வலர்களின் கடினமான உழைப்பும், கடப்பாடும் தேவைப்படுகிறது. அநேகமான நாடுகள் அந் நாடுகளின்படி அவற்றின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை ஒத்த பண்புகள் மற்றும் மாதிரியைக் கொண்ட சிறப்பாகச் செயலாற்றும் நாடுகளை அடையாளம் காண்பதற்காக வியாபாரம் செய்தல் தொடர்பான தரமிடலைப் பயன்படுத்துகின்றன. இலங்கையில், இலங்கை மத்திய வங்கி பொருளாதார அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து அதிமேதகு சனாதிபதி அவர்களால் தெளிவாகக் கூறப்பட்ட இலக்கை அடைவதற்கான உபாயத்தை ஒருங்கிணைந்து மேற்கொண்டது. 2011இற்கான வரவு செலவுத்திட்டம் வரி விதிப்பை இலகுவாக்குவதற்கான குறிப்பிடத்தக்க விரைந்த முன்னேற்றங்களை ஏற்கனவே அறிவித்தமையால் "செலுத்தும் வரிகள்" துறையில் தரமிடலை மேம்படுத்துகிறது. தொழில்முயற்சியாளர் ஒருவர் தேவையான ஆவணங்களை ஒரு இடத்தில் மட்டுமே சமர்ப்பிக்கும் மற்றும் அக்கறையுள்ள முகவரால் மேற்கொள்ளப்படும் தெளிவுபடுத்தல் என்பவற்றை "ஒரு கூரையின் கீழ் அனைத்தையும் பெற்றுக்கொள்ளல்" என்பதை நிறுவுவதன் மூலம் பல துறைகளில் சம்பந்தப்படுகின்ற பல எண்ணிக்கையான "நடைமுறைகளை" நீக்குவதற்கான தாராளமான எதிர்கால வாய்ப்பும் காணப்படுகிறது. இது கட்டடவாக்க அனுமதிகளைக் கையாளல், எல்லைகளுக்கப்பால் வர்த்தகம் செய்தல் ஆகிய துறைகளில் பயனுறும் விதத்தில் மேற்கொள்ளப்படலாம். காணிப் பதிவுத் துறையில் உறுதிப் பதிவை அறிமுகப்படுத்தல் ஈடுபடும் நேரத்தை கணிசமானளவில் குறைக்கும். தாமதத்தைக் குறைப்பதற்கான வழிமுறையை திட்டமிடுவதற்கும், ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவதில் தரமிடலை மேம்படுத்துவதற்கும் நீதிமன்ற நடைமுறையையும் நெருக்கமாக ஆராய்தல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கி வியாபாரத்தை வசதிப்படுத்தும் ஏனைய குணாதியங்களையும் உற்று நோக்குகிறது. குறிப்பாக, தகவலைத் தேடுதல் தொடர்பாக செலவிடப்பட்ட நேரம் மற்றும் முயற்சியைக் குறைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தொழில்முயற்சியாளர் ஒருவருக்கு அவனது/ அவளது வியாபாரத் தொழிற்பாட்டின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவைப்படும் அத்தியாவசிய தகவலைக் கொண்டிருக்கும் "வியாபாரம் செய்வதற்கான படிப்படியான வழிகாட்டி" என்ற சிறிய புத்தகத்தை ஏற்கனவே தயாரித்துள்ளது.

தடவையிலான அதிகரிப்புக்கள் காணப்படக் கூடிய வேளையில் இவ்வெதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்புக்கள் நுகர்வோர் மீது சுமத்தப்படாது அரசாங்கத்தினால் அல்லது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஈர்த்துக் கொள்ளப்படுமாயின் அதன் மோசமான விளைவுகள் மிகப் பாரியனவாகவும் தொடர்ந்து விடாப்பிடியான தன்மையைக் கொண்டதாகவுமிருக்கும். வலு விலையில் ஏற்படும் மாற்றங்களை இறுதிப் பயன்படுத்துநர் மீது சுமத்துவது உள்ளீட்டு விலைகளை மிக யதார்த்தமாகப் பிரதிபலிக்கச் செய்யும் பொருளாதாரத் தீர்மானங்களை உறுதிப்படுத்தும். உயர்ந்த பன்னாட்டு மசகெண்ணெய் விலைகளிலிருந்து தோன்றும் பொருளாதாரத்தின் மீதான தாக்கத்தினைக் குறைப்பதற்கு மாற்று வலு மூலங்களைப் பயன்படுத்துவதனை ஊக்குவிக்கும் தற்போதைய முயற்சிகள், வலுப் பாதுகாப்பு கலப்பு வலுக்களைப் பயன்படுத்தும் ஊர்திகளின் பாவனை, சிறந்த வீதி ஒழுங்குகள் மற்றும் மேம்பட்ட வீதி நிலைமைகள், சிறந்த போக்குவரத்து மற்றும் புதிய அரச போக்குவரத்து முறைமைகளின் அறிமுகம் என்பனவற்றை வலுப்படுத்துவதும் விரைவுபடுத்துவதும் மிக அவசியமானதாகும்.

**உள்நாட்டின் சமாதானம் மற்றும் உலகளாவிய பொருளாதார மீட்சி என்பன இடம்பெற்று வருவதனால், போதுமானளவு பெறுமதி கூட்டல்கள், புதிய உற்பத்தி வகைகளை மேம்படுத்துதல் மற்றும் ஏற்றுமதிச் சந்தைகளை பன்முகப்படுத்தல் என்பனவற்றுடன் இலங்கையின் ஏற்றுமதியாளர் புதிய வளர்ச்சி உத்வேகத்தினை அடைவதற்கான உள்ளார்ந்த வளத்தைக் கொண்டுள்ளன.** தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுடன், நவீன தொழில்நுட்பத்தையும் பெருமளவு வெளிநாட்டு முதலீடுகளையும் உள்ளீடு செய்வதனூடாக உலகளாவிய சந்தைக்கு பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகளையும் பணிகளையும் வழங்கும் பொருட்டு குறிப்பிட்ட கைத்தொழில்கள் பெறுமதித் தொடர்களை மேலும் அதிகரிப்பதற்கான அளப்பரிய உள்ளார்ந்த வளங்களைக்

கொண்டிருக்கின்றன. வியாபாரங்களை மேற்கொள்வதனை இலகுபடுத்துவதும் மேம்பட்ட பேரண்டப் பொருளாதாரச் சூழலும் புலம்பெயர்ந்த சமூகத்தினரிடமிருந்தும் அதேபோன்று வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்தும் கூடியளவு முதலீடுகளைக் கவரும். இலங்கை உற்பத்திகளின் உயர்தர கூறுகளுக்கான சந்தைகளைக் கைப்பற்றுவதில் கடுமையாக முயற்சிக்க முடியும். இறுதியாக இப்பொருட்கள் மற்றைய நாடுகளினால் இறக்குமதி செய்யப்பட்டு, பொருத்தப்பட்டு மீள ஏற்றுமதி செய்யப்படுகின்றன. மின்னியல் கருவிகளின் ஏற்றுமதிகளில் அண்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு இந்த உயர் பெறுமதி கொண்ட அளவில் சிறிய சந்தைகளின் விகிதத்தினைப் பிரதிபலிக்கின்றது. ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்துவது வெளிநாட்டுக் குழப்பங்களுக்கு பொருளாதாரம் தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மைகளை மேம்படுத்துகின்ற வேளையில் உலகளாவிய வளர்ச்சித் தன்மையில் காணப்படட அண்மைய போக்குகள் தோற்றம் பெற்று வரும் ஆசியாவிற்குள் குறிப்பாக, பயன்படுத்தப்படாத சந்தைகளின் கிடைப்பனவினைக் குறைத்து மதிப்பிட்டிருக்கின்றன. வெளிநாட்டு ஆளுகைகளின் கீழ் இருந்த பல நூற்றாண்டுகளிலும் அதன் பின்னரும் இலங்கையின் ஏற்றுமதிகளும் வெளிநாட்டு வர்த்தகமும் மேற்குலக சந்தைகளைச் சார்ந்ததாக இருந்திருக்கின்றன. எனவே, ஆசியாவிலுள்ள தோற்றம் பெற்று வருகின்ற சந்தைகளை நோக்கி வர்த்தகத்தினை மீள அமைப்பதற்கு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்வது அவசியமானதாகும். இவற்றினைப் பொறுத்தவரை தற்போதுள்ள இருபுடை மற்றும் பல்புடை வர்த்தக உடன்படிக்கைகளை வலுப்படுத்துவதும் வர்த்தகத்திற்கு தடையாகவுள்ள கொள்கைகளையும், கொள்கையல்லா தடைகளையும் அகற்றுவதும் அவசியமானவையாகும். வர்த்தக உடன்படிக்கைகளின் நன்மைகள் பற்றி வர்த்தகர்களுக்குப் போதுமான தகவல்களை வழங்குவது தவிர்க்க முடியாததாகும். அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும் குறைந்த செலவில் பல வகை உற்பத்திகளையும் பணிகளையும் அவர்களுக்கு வழங்கி அவர்கள் மகிழ்ச்சியுறச் செய்வதன் மூலம் அந்நாடுகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் மூலம் அவர்கள் மூலவளங்களை உச்சமட்டத்தில் பயன்படுத்த முடியும். வழமையான நாடுகளை ஊக்குவிப்பதற்கு எதிராக, வர்த்தக ஊக்குவிப்புக்கள் கூடியளவு தகவல்களை வழங்குவதற்காகவும் சந்தை சார்ந்ததாகவும் இருத்தல் வேண்டும்.

**உள்நாட்டுச் சேமிப்புக்களில் காணப்படும் பற்றாக்குறையினை கருத்தில் கொள்கையில், எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சிப் பாதையினைப் பேணுவதற்குத் தேவையான முதலீட்டு மட்டங்களை அதிகரிக்க வேண்டுமாயின் படுகடனை உருவாக்காத வெளிநாட்டு முதலீட்டுப் பாய்ச்சல்களை கூடியளவிற்குக் கவர்வது இலங்கைக்கு அவசியமானதாகும்.** அரச தனியார் பங்குடமைகளை ஊக்குவித்தல், குறிப்பாக கடந்த ஆண்டுகளில் முதலீட்டாளர் நம்பிக்கையினையும் வெளிநாட்டு முதலீடுகளையும் மேம்படுத்துவதற்கு வியாபார சிநேகபூர்வ சூழ்நிலைகளை உருவாக்குவது அவசியமானதாகும். செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் அண்மைய தளர்த்தல்கள் வலுவாக்கப்பட்ட பேரண்டப் பொருளாதாரச் சூழல், நாட்டில் ஏற்படுத்தப்பட்ட சமாதானம் என்பன முதலீட்டினை ஊக்குவித்த வேளையில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு மேலும் நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகவுள்ளது. தற்பொழுது வியாபாரம் செய்தல் சுட்டெண்ணில் இலங்கையின் நிலை 102ஆவது இடத்தில் இருப்பதுடன் இந்நிலையினை 2014ஆம் ஆண்டில் 30ஆவது நிலைக்கு உயர்த்துவதற்கு அரசாங்கம் இலக்கிட்டிருக்கிறது. ஏற்கனவேயுள்ள பலயீனங்களைச் சீர்செய்வதற்கும் அலுவலக நிருவாகத் தடைகளையும் வியாபாரத் தொழில் முயற்சியொன்றை தொழிற்படுத்தும் பொழுது ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்படுகின்ற செலவுகளைக் குறைப்பதற்குமாக, முக்கிய நிறுவனங்களின் தொழிற்பாடுகளுக்கு தேவையான விதந்துரைப்புக்களைச் செய்வதற்காக அரசாங்கம் ஏற்கனவே செயலாற்றக் குழுவொன்றினை நியமித்துள்ளது. அத்துடன் மத்திய வங்கி இச்செயற்பாட்டின் முன்னேற்றங்களை தொடர்பான நிறுவனங்களுடனும் உலக வங்கிக் குழுவுடனும் இணைப்புச் செய்தது. முதலீட்டாளர்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக 2010 ஒத்தோபரில் "இலங்கையில் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு படிப்படியான வழிகாட்டல்" என்ற நூலினை வங்கி வெளியிட்டது. திட்டமிட்டவாறு தேவையான சீர்திருத்தங்களை நிறைவேற்றுவதும் இடைப்பட்ட ஆண்டுகளில் இலக்கிடப்பட்ட தரங்களை நம்பகத்தன்மையுடன் எய்துவதும் முதலீட்டாளர் சூழலை உத்வேகப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தின் உள்ளார்ந்த வளர்ச்சியை பெற்றுக் கொள்வதற்கும் அவசியமானதாகும்.

**அறிவு மையம், வர்த்தக மையம், கப்பல்/ கடற்பாதை மையம், வான் போக்குவரத்து மையம் மற்றும் வலு மையம் என்ற ஐந்து உபாய மையங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடத்தினதும் மூலவளங்களினதும் அநுகூலங்களை பயன்படுத்தும் விதத்தில் அதன் உபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பொருளாதார மையமாக மாற்றியமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கின்றது.** அறிவு மையத்தின் முக்கிய மூலங்களை உருவாக்கி அந்த அறிவினை பிரயோக மையங்களுக்கு மாற்றல் செய்யும் கல்வி மற்றும் பயிற்சிகளினூடாக மற்றவர்களுக்குக் கொண்டு செல்வதாகும். இலங்கையிலுள்ள அறிவு மையத்தின் ஆரம்பக் கவனம் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் செலுத்தப்படுகிறது. இத்துறையின் அளப்பரிய முன்னேற்றங்கள் ஏற்கனவே அடையப்பட்டுள்ளதுடன் தொடர்பான துறைகளில் உயர்ந்த தேர்ச்சி பெற்ற தொழிற்படை கிடைக்கத்தக்கதாக இருப்பது இலங்கையில் அறிவு மையமொன்றினை ஏற்படுத்துவதற்கான ஆரம்பப் புள்ளியாக இதனை மாற்றியிருக்கிறது. வர்த்தக மையம் மற்றும் கப்பல்/ கடற் போக்குவரத்து மையம் என்பனவற்றின் நடைமுறைப்படுத்தலானது கொழும்புத் துறைமுகத்தினை பாரிய மாற்றிக் கப்பலேற்றல் மையமாகவும் காலியை சுற்றுலாத் துறைமுகமாகவும் திருகோணமலையினை கைத்தொழில் துறைமுகமாகவும் ஒலுவிலை மீன்பிடித்துறைமுகமாகவும்

அம்பாந்தோட்டையினை வசதிகளை வழங்கும் மையமாகவும் அபிவிருத்தி செய்வதனையும் நாட்டினைக் கப்பற்படுத்தல், வர்த்தக மற்றும் நிதி மையமாக அபிவிருத்தி செய்வதனையும் உள்ளடக்கியிருக்கிறது. இலங்கையை வான் போக்குவரத்து மையமாக அபிவிருத்தி செய்வது பண்டாரநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்தினை நவீனமயப்படுத்தல், மத்தாளவில் இரண்டாவது பன்னாட்டு வானூர்தி நிலையத்தினை நிருமாணித்தல், உள்நாட்டு வானூர்தி நிலையங்களை மேம்படுத்துதல் மற்றும் வான் போக்குவரத்து தொழில்துறையினை விருத்தி செய்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கிறது. இலங்கையின் வலு மையமாக அபிவிருத்தி செய்தல் புதிய வலு மூலங்களை அபிவிருத்தி செய்தல் புதிய தூய்மிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பன்னாட்டு எண்ணெய் வர்த்தகத்தினை நடத்துவதற்கான தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் என்பனவற்றுடன் தொடர்புபட்டதாகவுள்ளது. இம்மையங்களை மேம்படுத்துவதன் மூலம் நாட்டின் கேந்திர அமைவிடத்தின் சாத்தியமான நன்மைகளைப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது பாராட்டத்தக்க விடயமாக இருக்கின்ற அதேவேளை ஒவ்வொரு மையத்தினதும் பயனுறுதன்மை மற்றும் நேரகாலத்துடன் அவற்றை நிறுவுவது தொடர்பாக தேசிய கொள்கையொன்றினை வடிவமைப்பது மிக முக்கியமானதாகும். இம்மையங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஐந்து மையங்களையம் நிறுவுவது தொடர்பாக ஐந்து தொழிற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து பணியாற்றுவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு வேறுபட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய வேறுபட்ட நடவடிக்கைகளையும் இணைப்பதற்கான மத்திய மையமொன்றினை ஏற்படுத்துவது அவசியமானதாக இருக்கும். இவ்வைந்து மையங்களையும் அபிவிருத்தி செய்வதில் காணப்படும் முக்கிய தடையாதெனில் தேர்ச்சி பெற்ற ஆளணியினரின் பற்றாக்குறையாகும். இலங்கையை அறிவு மையமாக அபிவிருத்தி செய்வதற்கான உபாயத்தின் ஒரு பகுதியாக இத்தொழில்களுக்குத் தேவைப்படும் தேர்ச்சிகளில் ஆளணியினருக்கு பயிற்சி வழங்குவது உள்ளடக்கப்படல் வேண்டும். அதனை இம்மையங்களின் நிறுவகங்களில் மேற்கொள்ளப்படக் கூடியதாக உருவாக்க முடியும். அரச கல்வியை மேம்படுத்துவதற்குச் சமாந்தரமாக, சந்தைக்கு தேவைப்படும் தேர்ச்சியை வழங்குவதற்கு நாட்டின் மனித மூலதனத் தளத்தினை அபிவிருத்தி செய்வதற்கு அரசல்லா கல்வி மற்றும் பயிற்சி ஏற்பாடுகளை மேம்படுத்துவதும் முக்கியமானதாகும். தொடர்பான மையங்களுக்குத் தேவைப்படும் அவசியமான அறிவினையும் தேர்ச்சியையும் அபிவிருத்தி செய்வதற்கான பட்ட படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குவதற்கு பல்கலைக்கழகங்களுடன் ஒத்துழைத்து ஒன்றிணைந்து பணியாற்றுவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

**பொருளாதார நடவடிக்கையினைத் தூண்டும் முக்கியமானதொரு துறையாக சுற்றுலாத் துறையினை அங்கீகரிக்கின்ற விதத்திலும் கைத்தொழிலின் பாரிய வருமான உருவாக்க உள்ளார்ந்த வளத்தினைப் பரிசீலனையில் கொண்டும் 2016இல் எதிர்பார்க்கப்படும் 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு வசதியளிக்கும் விதத்தில் நாடு முழுவதும் சுற்றுலா தொடர்பான உட்கட்டமைப்புக்களையும் வசதிகளையும் விரிவாக்குவது அவசியமானதாகவுள்ளது.** முக்கியமான சுற்றுலா கவர்ச்சிகளை சுற்றியுள்ள பூர்வாங்க நடவடிக்கைகள் சுற்றுலாப் பயணிகள் கூடுதலான நேரத்தையும் பணத்தையும் இத்துறைகளில் செலவிடுவதனை உறுதிப்படுத்தும். முக்கியமான முதன்மைத் திட்டம் யாதெனில் ஒழுங்கற்ற அபிவிருத்திகளுக்கான தூண்டுதல்களையும் சுற்றுலா தொடர்பான செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்கு நீண்ட காலம் எடுப்பதனையும் தவிர்ப்பதாகும். இது தொடர்பாக, சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற விதத்தில் நாட்டினை பல்வேறு விதங்களில் பன்முகப்படுத்துவதனை ஊக்குவிப்பதற்கு அரசாங்கமும் தனியார் துறையும் ஒன்றிணைந்து பங்குடமை ரீதியில் பணியாற்றுவது அவசியமானதாகும். சுற்றுலாவுடன் தொடர்பான உட்கட்டமைப்புக்களையும் நிறுவனங்களையும் அபிவிருத்தி செய்தல், சந்தைகளை கைப்பற்றுதல், தனியார் துறையின் முதலீடுகளைத் தூண்டும் சூழ்நிலைகளை உருவாக்குதல் என்பனவற்றின் மீது அரசாங்கம் கவனம் செலுத்தும் வேளையில் தனியார்துறை, உற்பத்திகளை அபிவிருத்தி செய்யும் அம்சங்களில் முன்னணி வகித்தல் வேண்டும். சுற்றுலாப் பயணிகளுக்குத் தரமான பணிகள் கிடைப்பதனை உறுதிப்படுத்துவதற்கு சுற்றுலாத் துறையின் பல்வேறுபட்ட ஆர்வலர்களிடையே மனித மூலவளத்தினை அபிவிருத்தி செய்து கொள்ளல் அவசியமாகும். இது சாதகமான விளம்பரப்படுத்தல் மூலமாக இலங்கையில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொள்வதனை ஊக்குவிக்க உதவும். பல்லினத் தன்மையினால் கவரப்பட்டு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒன்றில் ஒன்று சார்ந்த அனுபவங்களையும் விளக்கங்களையும் அவர்களின் நுகர்வுகளுக்கேற்ற தரமான பொருட்களை அபிவிருத்தி செய்வதற்கான வரவேற்கத்தக்க நடவடிக்கைகளை எடுப்பதும் அவசியமாகையால் சுற்றுலாத் துறையின் செயற்பரப்பினையும் சுற்றுலாப் பயணிகளின் வெவ்வேறுபட்ட குழுவினருக்கு பல்வேறுபட்ட பொருட்களை வழங்கும் விதத்தில் அவற்றினைப் பன்முகப்படுத்துவதனையும் நோக்கி நாம் முன்னேறுதல் வேண்டும். சுற்றுலா தொடர்பான அனைத்துச் செயற்றிட்டங்களும் வருமானத்தையும் தொழில் வாய்ப்புக்களையும் உருவாக்குவதனையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு தூண்டுதல்களையும் வழங்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற போதும் சுற்றுலா மூலவளங்களின் அபிவிருத்தி வலுவான முறையில் இடம்பெறுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் பொருட்டு சூழல் மற்றும் சமூக - கலாச்சார காரணிகளையும் பரிசீலனைக்கெடுத்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

**நிதியியல் முறைமை நெருக்கடிக்குள்ளாகாத நாடுகளிலும் பார்க்க நிதியியல் நெருக்கடிக்குள்ளான பாதிக்கப்பட்ட நாடுகள் ஆழமான மந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளமையினை அண்மைய பன்னாட்டுச் சான்றுகள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளமையினால் நிதியியல் முறைமை**

**உறுதிப்பாட்டினை வலுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது[4].** குழப்பமடைந்துள்ள நிதியியல் முறைமையானது நிதியியல் இடையீடுகளினதும் அதேபோன்று நாணய பரிமாற்ற பொறிமுறைகளினதும் வினைத்திறனைக் குறைத்து விடுகின்றது. பரவக்கூடிய தாக்கங்களைக் குறைக்கும் பொருட்டு உலகளாவிய நாணய மற்றும் நிதியியல் ஒழுங்குகளின் சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்கின்ற வேளையில், உள்நாட்டு ரீதியாக நிதியியல் கண்காணிப்பிற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்றங்கள், ஒழுங்குமுறைப்படுத்துபவர்களிடையேயான இணைப்புக்களை பலப்படுத்தல், பேரண்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகளைப் பலப்படுத்தல், பல்வேறுபட்ட வெளியீடுகள் மற்றும் வேறு வடிங்களிலான தொடர்பூட்டல்கள் மூலம் பொதுமக்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல் மற்றும் நிதியியல்துறைப் பகுப்பாய்வுகள் உட்பட மத்திய வங்கியினால் அண்மையில் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கை பகுப்பாய்விற்கான இரட்டை அணுகுமுறை என்பன நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, தனியார்துறை முதலீடுகளை உயர்த்துவதற்கான நிதியியல் துறையின் பங்களிப்பு, குறிப்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவுத் தொழில் முயற்சிகளுக்கான உயர்ந்த கடன் வழங்கல் நியதிகளில் நீண்டகால கடன் வழங்கல் அதிகரித்துள்ளதுடன் அபிவிருத்தி செயல்முறைகளில் பொருளாதார ரீதியில் நாட்டின் பின்தங்கிய பகுதிகளையும் உள்ளடக்கும் விதத்தில் நிதியியல் துறையின் செயற்பரப்பு விரிவடைந்து வருவதுடன் செலவுகளைக் குறைக்கும் தொழில்நுட்பங்களும் பின்பற்றப்படுகின்றன. நிதியியல் துறையில் புத்தாக்கம் தீவிரமாக ஊக்குவிக்கப்பட்டு உதவியளிக்கப்படுதல் வேண்டும்.

**மீள்கட்டுமானம், பௌதீக, சமூக மற்றும் நிதியியல் உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி ஆகிய நியதிகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளமையினை 2010 காட்டிய வேளையில், இச் செயன்முறையினை தொடர்ந்து மேற்கொள்வதும் அவசியமாகவுள்ளது.** பௌதீக உட்கட்டமைப்பிற்கு, குறிப்பாக வீதிகள் மற்றும் புகைவண்டி வலையமைப்பிற்கான அபிவிருத்திகள் மற்றைய பிரதேசங்களுக்கான இணைப்புக்களை உயர்த்தும். வேளாண்மை அபிவிருத்தி நியதிகளில், காணிப் பயன்பாட்டு கொள்கைகளை அறிமுகப்படுத்துவது வேளாண்மை உற்பத்தியாக்த்தினை மேம்படுத்தும், வேளாண்மை ஆராய்ச்சிக்கான ஆதரவு இப் பிரதேசங்களுக்கு புதிய பயன்களை அறிமுகப்படுத்துவதனை இயலச் செய்யும், மீன்பிடித் துறைமுகங்களை தொடர்ந்தும் முன்னேற்றுவதும் ஆழ்கடல் மீன்படிகளுக்கு வசதியமைப்பதும் தென்னிந்திய மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையேயான பிரச்சனைகளுக்கு இணக்கமான முறையில் தீர்வு காண்பதும் பொருளாதாரத்தில் வேளாண்மை உற்பத்திகளின் நிரம்பலை உயர்த்தும் வேளையில் நிதியியல் நன்மைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள உற்பத்தியாளர்களுக்கு மாற்றல் செய்யப்பட்டு வருகின்றன. தனியார் துறையினால் வழிநடத்தப்படும் வேளாண்மையினை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களையும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளையும் அதேபோன்று பாரிய அளவு தொழில் முயற்சிகளை மீளெழுச்சிப்படுத்துவதனையும் தொடர்வது அவசியமானதாகும். மேலும் சுற்றுலா தொடர்பான நடவடிக்கைகளுக்கு வசதியளித்தல். இந்தியத் துணைக் கண்டம் வரை விசாலிக்கும் வகையில் வழங்கலை மேற்கொள்ளும் விதத்தில் கைத்தொழில் துறைமுக மையமாக திருகோணமலையினை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றினூடாக பணிகள் துறையினை மேம்படுத்தல் வேண்டும். பாரிய தனியார்துறை முதலீடுகளினூடாக நலம் மற்றும் கல்விப் பணிகளை மேம்படுத்துவதும் அவசியமாகும். வீதி மற்றும் புகைவண்டிப் பாதை வலையமைப்பின் விரைந்த அபிவிருத்திக்குப் புறம்பாக, மிக இன்றியமையாத இன்னொரு விடயம் யாதெனில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு கடல் மற்றும் வான் வழிப்பாதைகளை விருத்தி செய்து அவற்றை சுற்றுலாக் கைத்தொழில்களுக்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் ஒருமைப்பாட்டினை வலுவுறச் செய்து அபிவிருத்தியின் நன்மைகளை முழுப் பொருளாதாரத்திற்கும் பங்கிடுவதேயாகும்.

**நாட்டின் தலைக்குரிய வருமானத்தினை 2016ஆம் ஆண்டளவில் ஐ.அ.டொலர் 4,000 இற்கு இரண்டு மடங்காக்கும் இலங்கை அரசாங்கத்தின் தொலைநோக்கிற்கும் இலங்கையை "ஆசியாவின் அதியம்" ஆக மாற்றுவதற்கும் ஏறத்தாழ 8.0 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தினை இனிவரும் ஆண்டுகளில் பேணுவது அவசியமானதாகும்.** கடந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் விரைவடந்தமையினையும் உயர்ந்த வளர்ச்சி உத்வேகம் எதிர்பார்ப்புக்களுக்கு இணையாக திரும்பியிருப்பதனையும் காட்டிய வேளையில், பொருத்தமான கேள்வி முகாமைத்துவக் கொள்கையின் உதவியுடன் பணவீக்கம் உறுதியான தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது. எதிர்வரும் ஆண்டுகளில் எதிர்நோக்கப்படும் முக்கிய சவால் யாதெனில் தனியார்துறை முதலீடுகளை இயலச் செய்யும் சூழலை உருவாக்குவதும் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகத்திற்கு வலுவளிப்பதற்குத் தேவையான தற்பொழுது நடைபெற்று வரும் உட்கட்டமைப்பு மற்றும் மீள்கட்டுமான செயற்றிட்டங்களுக்கு வசதியளிப்பதாகவுமுள்ள வேளையில் தாழ்வானதும் உறுதியானதுமான பணவீக்க வீதத்தினைப் பேணுவதேயாகும். தற்பொழுது நடைபெற்று வரும் வளர்ச்சி செயன்முறைகள், உள்நாட்டு மூலவளங்களுக்கு பெருமளவு கேள்வியை ஏற்படுத்துவதனூடாக குறுங்கால விலை அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடுமெனினும், இது, மோசமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்வி மற்றும் வழங்கல் அதிர்வுகளுக்கு நாடு தாக்குப்பிடிக்கக் கூடிய விதத்தில் நீண்டகால உறுதிப்பாட்டிற்கு இட்டுச் செல்லும்.

4 பார்க்க ஸ்டான்லி பிஷ்சரின் "உலகளாவிய நெருக்கடிகளிலிருந்து மத்திய வங்கி கற்ற பாடங்கள்" ஆர் பி ஐ மாதாந்த செய்தித்திரட்டு மாச்சு 2011 பக்கம் 281-290 மற்றும் கார்மன் றெயின்கார்ட் அன்ட் றொகொவ் 'இந்த நேரம் வித்தியாசமானது' பிறின்சரன், பல்கலைக்கழகம் 2009.